THE POINT OF VIEW

AND

THE TWO SELVES

ADAPTATIONS OF

Mr. V. V. Srinivasa Iyengar's two English Dramas

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A., B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, " Blessed-in a Wife," " The Dancing Girl " " Subbadra-Arjuna " " Karna-The Giver " "Sahadeva's Stratagem" " Bricks Between & At Any Cost" "Surgeon General's prescription & Vichu's Wife" " Sakuntala " " Vikramorvasi " etc. in Tamil, and " Harischandra," and " Yayathi " in English.

FIRST EDITION.

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE " PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1929

All Rights reserved.] [Price per Copy 1-0-0

நோக்கத்தின் குறிப்பு

இரண்டு ஆத்துமாக்கள்

இவை

ம-௱-௱-ஶ்ரீ வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார்
ஆங்கிலத்தில் எழுதிய
இரண்டு நாடகங்களின் தமிழ் அமைப்பு.

ராவ் பஹதூர்
ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,
அவர்களால் இயற்றப்பட்டன.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:

"லீலாவதி-சுலோசனை" "கள்வர் தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி-முதற் பாகம்," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்," "வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்" "சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சகதேவன் சூழ்ச்சி" "இடைச்சுவர் இருபுறமும் - என்ன நேர்ந்திடினும" "சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து-விச்சுவின் மனைவி" "சகுந்தலை" "விக்கிரம ஊர்வசி" முதலியன.

முதற் பதிப்பு

சென்னை:
டௌடன் கம்பெனியாரின்
பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1929

காபி ரைட்] [விலை [illegible]

Preface to the First Edition.

These two dramas are adaptations in Tamil of Mr. V. V. Srinivasa Iyengar's English dramas bearing the same name. I have to thank my friend for permitting me to adapt them in Tamil.

Persons desirous of staging this or any other drama by me, are informed, that they will have to pay a small royalty which I charge, and take my previous permission before doing so, otherwise they make themselves liable to be prosecuted for breach of copyright.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
16th November 1929.

The Author.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU.

நோக்கத்தின் குறிப்பு

நாடக பாத்திரங்கள்

ராமசந்திரராவ் பஹதூர்	...	*ராஜம்பெட் ஜமீன்தார்.*
கோபிநாதராவ்	...	*அவரது தாயாதி.*
கிரிஜாபாய்	...	*அவரது மனைவி.*
சுந்தரிபாய்	...	*அவரது தாயார்.*
பத்மினிபாய்	...	*அவரது பெண்.*
டாக்டர் வி. வி. நாயுடு	...	*ஒரு வயித்தியர்.*
பீதாம்பர ஐயர்	...	*ஒரு ஜாயர்.* [னர்.
கிருஷ்ண ஐயங்கார்	...	*ஒரு கவர்ன்மென்டு பென்ஷ*
சுப்பன்	...	*ஜமீன்தாருடைய வயோதிகனான குடும்ப வேலையாள்.*

காலம்:—*தற்காலம்.*

நோக்கத்தின் குறிப்பு

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்:—ராஜம்பேட்டையில்
ராமசந்திரராவ்பஹதூருடைய மாளிகையில் ஓர் அறை.

காலம்:—காலை.

ராமசந்திரராவ்பஹதூர் ஏதோ கொஞ்சம் உடம்பு அசௌக்கியமாய் ஒரு பெரிய சாய்வுநாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். அருகிலிருக்கும் மெத்தை போடப்பட்ட ஓர் பெரிய நாற்காலியில் கிருஷ்ண ஐயங்கார் உட்கார்ந்திருக்கிறார். ஒரு பக்கத்திலிருக்கும் மேஜையின்மீது சில மருந்து புட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. படுக்கையறை சோபா ஒன்று ஒரு பக்கம் இருக்கிறது. சில சிறிய நாற்காலிகள் அங்கங்கு கிடக்கின்றன.

ரா. இவ்வுலக வாழ்க்கையென்று சொல்லுகிறோமே,—இது என்ன அருமையான வேடிக்கை! இதை அறிந்தவர்கள் ஒருவரும் கிடையாது, ஆயினும் எல்லோரும் இதை நன்றாய் அறிந்தவர்கள்போல் நடக்கிறார்கள்!

கி. அதுதான் அதனுடைய தத்வார்த்தம் போலும்?

ரா. தத்வார்த்தங்கள் அருகில் நான் போவதில்லை; அவற்றையெல்லாம் தங்களைப்போன்ற சாஸ்திரிகளுக்கு விட்டுவிட்டேன்.

கி. எனக்கென்ன சாஸ்திரம் தெரியும்?-ஆயினும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகிறார்—

ரா. பொறும், பொறும் ஐயங்கார் அவாள்!—ஐயோ பாபம்! ஸ்ரீ கிருஷ்ணபகவான், பென்ஷன் வாங்கிக்கொண்ட டெப்டி கலெக்டர்களெல்லாம் இவ்வாறு அதைத் தப்

பாக ஒப்பித்து விபரீதமான வியாக்கியானங்கள் செய்வார்களென்று கொஞ்சமாவது சந்தேகப்பட்டிருந்தால், அந்த பகவத்கீதையை வெளிப்படுத்தியே யிருக்கமாட்டார்.

கி. தங்களுடைய ஆயுளில்-இந்தச் சமயத்தில்-ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பற்றித் தாங்கள் தூஷணமாகச் சொல்வது நியாயமல்லவென்று தோன்றுகிறது.

ரா. என்ன என் ஆயுளில் இந்தச் சமயத்திற்கு வந்தது? இந்த வயித்தியர்களெல்லாம் சேர்ந்து நேற்று சாயங்காலம் பண்ணிய காபுராவில் என் கடைசி காலம் கிட்டியதென்று நினைத்தேன்; அபூர்வமான அனுபவங்கள் எல்லாம் உய்த்துணர்வேன் என்று எதிர்பார்த்திருந்தேன். முடிவில், இவ்வாழ்க்கை எவ்வளவு சாதாரணமும் சாரமற்றதாயுமிருக்கிறதோ, அதுபோலத் தான் சாதலும் இருக்கும் போலிருக்கிறது.

கி. தாங்கள் மனிதர்கள் சாவதை முன்னமே பார்த்திருக்கிறீர்களே?

ரா. ஆயினும் சுய அனுபவத்தைப் போல் எதுவும் ஆகாது பாருங்கள், முன்பு செத்திருந்தால்தான் சுடுகாட்டுக்குப் போக வழி தெரியும் என்று சொல்வதில்லையா ஜனங்கள்?

கி. இதென்ன ஜமீன்தார் அவாள், சுடுகாட்டைப்பற்றியும் சாதலைப் பற்றியும் இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு என்ன வியாதி என்று சொல்லுகிறார்கள்? நேற்று ராத்திரி நான் வந்ததும்—உங்களுக்கு உடம்பு அசௌக்கியமாக இருப்பதாக—மிகவும் அசௌக்கியமா யிருப்பதாக—கேள்விப்பட்டேன். சென்ன பட்டணத்திலிருந்து பெரிய வயித்தியர்களெல்லாம் வந்து பார்த்ததாகவும் கேள்விப்பட்டேன். ஏதாவது மிகவும் அபாயமானதோ?

ரா. ஹா! ஹா! வியாதி விஷயத்தில் சுவல்பமாகிறதும் அபாயமாகிறதும் வயித்தியர்கள் விதித்தபடி, என்கிற பழமொழியைத் தாங்கள் கேட்டதில்லையா? சமாசாரம் என்னவென்றால், இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு நாள், அதிகாலையில், என் அடி வயிற்றில் ஏதோ நோய் கண்டது. என் தாயார் உடனே டாக்டர் நாயுடுவுக்குச் சொல்லி யனுப்பினார்கள். அவர் வந்தார். அவர் என்னைப் பரீட்சைப் பார்க்கப் பார்க்க, காலம் நீண்டதுபோல் அவர் முகமும் நீண்டது. இந்த நோயைத்தான் அறிவது கஷ்டமான காரியம் என்றார்—அதற்கு சந்தேகமென்ன?—எனக்கல்லவோ நோய் இருந்தது—இதாயிருக்கலாம் அதாயிருக்கலாம் என்று என்னன்னவோ மருந்து கொடுத்துப் பார்த்தார். ஒன்றும் பயன்படவில்லை. இப்பொழுது புதிதாய் ஒரு வியாதி, அபென்டிசைடிஸ் (Appendicitis), என்று ஒன்றுகண்டு பிடித்திருக்கிறார்களே—பணக்காரர்களுக்குத் தான் வருகிறதாம் அந்த வியாதி—அதுவாகத்தான் இருக்கக்கூடும் என்கிற முடிவிற்குவந்தார். குழாய்த் தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்காக ஏற்படுத்தி யிருக்கிற புதிய கட்டடங்களைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபம் பண்ணினார்; கடைசியில் பெரிய வயித்தியர்கள் வந்து பரீட்சித்துப் பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினார்; அதற்கு அவருக்குப் போதுமான காரணங்கள் இருந்திருக்க வேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை. வீட்டிலிருந்தவர்களெல்லாம், என் தாயார் சுந்தரிபாய் முதல் என் பழய வேலைக்காரன் சுப்பன் வரையில், எல்லோரும் வயித்தியர் பக்கம் சேர்ந்து பேசினார்கள்; நீங்கள் ஊரிலில்லை; நான் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. நேற்று சாயங்காலம் பெரிய வயித்தியர்களெல்லாம் வந்து பரீட்சித்துப் பார்த்தார்கள். ஒரு மணி சாவகாசம் அவர்கள் மனம்போனபடியெல்லாம் என்னைப் பரீட்சித்துப் பார்க்க நான் உடன்படவேண்டியதாயிற்று. பிறகு பக்கத்தறையில் உட்கார்ந்து கொண்டு

இன்னொரு மணி நேரம் இரகசியம் பேசினார்கள். அப்பொழுதுங்கூட, அது இன்ன வியாதி என்று அவர்களெல்லாம் ஒரு தீர்மானத்திற்கு வருவது அசாத்தியமாயிருந்தது; அதற்கு இன்ன பெயர் வைப்பது என்றுகூட அவர்களால் சொல்லமுடியவில்லை! ராத்திரி நன்றாகத் தூங்கி பிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்று போயிருக்கிறார்கள். அவர்களுடைய தீர்ப்பை ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்க்கிறேன். டாக்டர் நாயுடு இங்கே பத்து மணிக்கெல்லாம் வருவதாகச் சொல்லி யிருக்கிறார்.

கி. இந்த, நம்முடைய உடலாகப்பட்டது, நமக்கு எவ்வளவு கஷ்டம் கொடுக்கிறது பாருங்கள்! நம்மை சிருஷ்டித்தவர் இந்தப் பளுவை நாம் சுமக்கச்செய்யாதபடி சிருஷ்டித்திருக்கக் கூடாதா என்று யோசிக்கிறேன்.

ரா. இப்பொழுது தாங்கள் தான் தெய்வத்தை தூஷிக்கிறீர் ! ஸ்ரீ கிருஷ்ணபகவான், முன்பே யோசனை செய்து, இவர்கள் கஷ்டப்படட்டும், என்னும் துர் எண்ணத்துடன் தான், வெறும் குறும்பாக இந்த உடலை நமக்குக் கொடுத்திருக்கவேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கி. அப்படிச் சொல்வது சாஸ்திரவிருத்தமாகும். ஸ்ரீகிருஷ்ணபகவான் எங்கேயோ சொல்லியிருக்கிறார்-ஒரு சந்தர்ப்பத்தில்—அது எனக்கிப்போது ஞாபகம் வரவில்லை—

ரா. அப்பா !—மிகவும் சந்தோஷம்.

கி. உடம்பு கொஞ்சம் சுமாராக இருக்கிறதோ ?

ரா. சந்தேகமென்ன?—வேறு எப்படி யிருக்கும்? என்னுடன் வார்த்தையாட நீங்கள் அருகிலிருக்கும்பொழுது ?

கி. வயித்தியர்கள் என்னவோ, ஒருவரும் உங்களைப் பார்க்கலாகாது, என்று உத்திரவு செய்திருக்கிறார்களாமே ?

ரா. அது அவர்களுடைய சுபாவம்!-பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்! அதற்கொரு காரணமுண்டு, என் சிநேகிதர்களெல்லாம் என்னிடம் வழக்கப்படி வந்து பேசிக்கொண்டிருந்தால் நான் அதிக அசௌக்கியமாக இருக்கிறேன் என்று வயித்தியர்கள் நினைப்பதை நான் மறந்தாலும் மறக்கக்கூடும் என்கிற ஒரு அபாயம் இருக்கிறதல்லவா? அவர்கள் என்ன செய்வார்கள் பாபம்! ஒருவேளை அவர்கள் சொல்வது வாஸ்தவமா யிருக்கலாம்; நான் தனியாக இருந்தாலொழிய என் வியாதியைப் பற்றியே, நான் ஏகாக்ர சிந்தையா யிருக்க முடியாது. ஏகாக்ர சிந்தையாய் எதைப்பற்றி யோசித்தபோதிலும், அது விர்த்தி யடைகிறதல்லவா—வியாதி உட்பட ?

கி. ஆம் ஆம்! அது நிரம்ப ஆச்சரியமான விஷயம்! மனதை ஒரு வழிப்படுத்தும் மார்க்கங்களில் ஒன்றாகிய யோகத்தைப் பற்றி ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லியதை ஒத்திருக்கிறது.

ரா. சந்தேகமென்ன—உலகத்தி லுள்ளதெல்லாம் பகவத்கீதையினுள் அடங்கியி ருக்கிறதல்லவா ?

கி. ஆமாம்! என்ன ஆச்சரியம்! அத்தனைக்கும் அது இவ்வளவு சிறிய புஸ்தகம்!

ரா. அணுவில் அண்டம் அடங்கி யிருக்கிற தென்கிறார்களே, அம்மாதிரி அது; புஸ்தகங்களெல்லாம் மாத்திரைகளைப் போல்—எவ்வளவு சிறியதா யிருக்கிறதோ அவ்வளவும் நல்லது—சுலபமாய் விழுங்கலாம்!

கி. வாஸ்தவம்! அதை ஒரு மணி நேரத்தில் முற்றிலும் படித்து விடலாம்; அதன் தத்வார்த்தத்தை அறிவதற்கு ஒரு ஆயுட்காலம் போதாது!

ரா. அந்த ஒரு காரணம் பற்றியே நான் அவ்விரண்டில் ஒன்றையும் முயலவில்லை. ஆயினும் இந்த விஷயங்களெல்லாம்

என் இயற்கை யறிவினால் எப்படியோ தெரிந்துகொள்ளு கிறேன், என்று என் புத்தியிற் படுகிறது.

கி. இயற்கையறிவு என்பதின் மற்றொரு பெயர்—

ரா. ஸ்ரீ கிருஷ்ணன் !—சந்தேகமென்ன! ஸ்ரீ கிருஷ்ணன் அவருடைய பெயரை உடையவர்களிடம் மாத்திரம் இருக்கிறாரா என்ன ?

சுப்பன் வருகிறான்.

சு. எசமானுடைய பந்து-கோபிநாத ராயர் வந்து—எசமானுடைய தாயாருடன் பேசிக்கொண்டிருக்கிறார்;—எசமானைப் பார்க்கவேண்டுமென்கிறார்.

கி. என்ன ! கோபிநாத்ராவா ? நான் நினைத்தபடி—

ரா. சரி !—அது எல்லாம் சரிதான்—ஆமாம்—உள்ளேவரச் சொல், [சுப்பன் மயங்குகிறான்.] சுப்பா, போய் அவரை உள்ளேவரச்சொல்.

[சுப்பன் போகிறான்.]

ஐயங்கார் அவாள், நீங்கள் போகவேண்டாம், கொஞ்சம் வேடிக்கை பார்ப்போம். உலகத்தில், நாம், வருவதை யெல்லாம்—கோபிநாதராயர் உட்பட—அனுபவித்துத் தானே தீரவேண்டும்.

கி. என்ன உலகம் போங்கள் !

ரா. மூடர்களும் முற்றும் துறந்த ஞானிகளும் உலகத்தை முனியலாகாது—உட்—முற்றும் துறந்த ஞானி தாங்கள் !—

கோபிநாத்ராவ் பெருங்கவலையோடு கூடிய
நீண்டமுகத்துடன் வருகிறார்.

ரா. கோபிநாத்ராவ், அந்த நாற்காலியில் உட்காருங்கள், என்ன உடம்பு உங்களுக்கு ? நீங்கள் ஏதோ மிகவும்—

கோ. வேறு எப்படி யிருக்குமெனக்கு? நீங்கள் இவ்வளவு அசௌக்கியமாய்ப் படுத்திருக்கும் பொழுது?

ரா. ஓ! ஆமாம்! நான்மறந்தேன்—அதைப்பற்றி கவலைப் படாதீர். நான் படுத்திறக்கும்படியாக அவ்வளவு அசௌக்கியமாயில்லை. ஆனாலும், உலகத்தில் பிறந்த வர்களெல்லாரும்—ஒரு நாள்—இறக்கவேண்டியவர்கள் தானே. நீடித்திருப்பதைவிட கூடிய சீக்கிரத்தில் இறப்பது மேலல்லவா?—உங்களுக்கு என்ன தோற்றுகிறது?

கோ. எனக்குத் தெரியாது. என்னைப் போன்ற ஏழைகள் விஷயத்தில் அப்படி இருக்கலாம். ஆயிரக்கணக்கான மனிதர்கள் தாங்கள்தான்கதி என்று எதிர்பார்க்கும் ஜமீன்தாராகிய தாங்கள்—

ரா. கொஞ்சம் தயவு பண்ணவேண்டும்—இம்மாதிரி தாங்கள் துக்கப்படக் கூடாது. இப்பொழுதே என் உயிர் போய் விடும் போலிருக்கிறது!

கி. ஜமீன்தார் அவாள் நிரம்பபாதைப் படுகிறார்கள், நாம் அதை அதிகப் படுத்தலாகாது.

ரா. உம்மால் முடியாது—உம்மால் அதை அதிகப்படுத்தவும் முடியாது, வயித்தியர்களால் அதைக்குறைவு படுத்தவும் முடியாது. எல்லாம் தலைவிதியின்படி ஆகிறது!

கோ. ஆம்—எல்லாம் விதிப்பயன்! அதைத்தவிர்க்க யாரால் ஆகும்?

ரா. ஒருவராலும் முடியாது—முக்கியமாக இந்துக்களாகிய நம்மால்! பகவத்கீதை அவ்வாறு சொல்லவில்லையா?

கி. அப்படியே சொல்லியிருக்கிறது!

கோ. நம்முடைய மதத்தில் எவ்வளவு நம்பிக்கையும், ஈஸ்வரன் விட்டபடியாகிற தென்னும் திடமும் தங்களிடம் எவ்

வளவு குடிகொண்டிருக்கின்றன! இப்படிப்பட்ட உத்தம புருஷர்கள் தான் நேராக மோட்சம் போவார்கள்.

ரா. ஓ! நான் எப்படி மோட்சம் போகமுடியும்! எனக்குப் பிள்ளையில்லையே.—ஐயங்கார் அவாள், புகைந்தெரியும் புத் என்னும் நரகத்தினின்றும் புத்திரன் ஒருவன்தான் பிண்டம் அளிப்பதினால் ஒருவனைக்காப்பாற்றுகிறான், என்று நமது சாஸ்திரங்கள் கூறவில்லையா?—ஹா! என்ன கோரம்!

கோ. இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம், படித்தறிந்தவர்களாகிய தங்களைப் போன்றவர்கள் நம்பவேண்டியது அவசியமா, என்று எனக்குத் தோன்றுகிறது—இல்லை அப்படியிருந்த போதிலும்—

ரா. என்ன அப்படியிருந்த போதிலும்? படித்தறிந்தவர்களுக்கு மோட்சம் போகவேண்டிய ஆத்மாக்களில்லையா? அல்லது படித்ததினால் அவர்களுடைய ஆன்மாக்கள் அவர்களை விட்டு அகல்கின்றனவா?

கோ. இல்லை—இல்லவேயில்லை. நான் சொல்லவந்ததெல்லாம், நீங்கள் மனசுமாத்திரம் வைத்தால் நூறுபிள்ளைகளைப் பெறலாமே, சும்மா கேட்டால்—என்பதுதான்.

ரா. நூறு!—சும்மா கேட்டால்!—என்னைப்பற்றிய விஷயம் எனக்கொன்றும் தெரியாதென்று நான் ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.

கோ. அதற்குச் சந்தேகமில்லை—வாஸ்தவமாக நீங்கள் யாரைக் கேட்ட போதிலும், தங்கள் பிள்ளையை உங்களுக்குக் கொடுக்க இசைவார்கள்.

ரா. ஓ! இதையா சொல்லவந்தீர்?—ஆம் ஆம்! எத்தனை விதமான பிரீதி உடையவர்கள் இருக்கிறார்கள்!—இன்னும் சிலர்—ஒன்றோ இரண்டோ!—நான் கேட்கும்படியான கஷ்டமும்—எனக்கு வைக்கமாட்டார்கள்!

கோ. யார் தான் அப்படிச் செய்வார்கள் ?

ரா. எவ்வளவு தயவுள்ள சுபாவம் உம்முடையது ! வாஸ்தவமாக, நீங்கள் வருவதற்குக் கொஞ்சம் முன்பாகத் தான்—எல்லோரும் என் விஷயத்தில் எதிர்பார்ப்பது ஒருசமயம் எனக்கு நேரிடுமாயின்,—என்னுடைய நெருங்கிய பந்துவாகிய நீங்கள், எனது வயதான தாயாரையும் பெண் சாதியையும் சும்மா இருக்க விடமாட்டீர்கள், என்று என் சிநேகிதராகிய கிருஷ்ணையங்காரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆம், உண்மையில் ரத்த பாசம் சும்மா இருக்கவிடாது. இதனை யறிந்துதான் நம்முடைய பூர்வகாலத்து ரிஷிகள், ஆச்சரியமான அவிபக்த குடும்பம் என்று ஹிந்துக்களுக்கு ஒன்றை ஏற்படுத்தினார்கள். ஐயங்கார் அவாள், உங்களுக்கு நான் என்ன சொன்னேன் ?—நீங்கள் நமக்குள்ளிருந்த சண்டைச் சரவுகளை யெல்லாம் மறந்து போனது எனக்கு மிகவும் சந்தோஷம் ;—தாயாதி என்பவன் தருந்தசமயம் பார்த்து வருபவன் தானே ?

கோ. மூத்த அண்ணா அவர்கள், அவ்வளவு முகஸ்துதியாகச் சொல்லக்கூடாது என் விஷயத்தில் !

ரா. அப்படியில்லவே இல்லை ! வாஸ்தவமாக உம்மை முகஸ்துதி செய்யவில்லை.

சுப்பன் மறுபடியும் வருகிறான்.

சுப்பா, என்ன சமாசாரம் ?

சு. வயித்தியர் வந்திருக்கிறார் — எசமானை உடனே பார்க்க வேண்டுமென்கிறார். என்மீது அவர் மிகவும் கோபமாயிருக்கிறார்—நாங்கள் எஜமானை—அநேகர்—பார்த்து அவருடன் பேசவிட்டதற்காக—

ரா. வாஸ்தவமாகவா? அதற்காக நீபயப்படாதே சுப்பா. வயித்தியரிடம் சொல், அவர் என்னை விட்டாலும் விடலாம், நான் உன்னைவிடமாட்டேன் என்று சொல் போ.

கி. நான் கொஞ்சம் போகவேண்டியிருக்கிறது—உத்தரவு கொடுக்க வேண்டும்; முடியுமானால் நான் உங்களை நாளை பார்க்கிறேன்.

ரா. மிகவும் சந்தோஷம்; இன்னும் நாம் பேச வேண்டியிருக்கிறது—இவ்வுலகத்தைப்பற்றி; இன்னொரு சமயம் வாருங்கள்.

கி. நான் வருகிறேன்.

[போகிறார்.]

கோ. நானும் உத்தரவு வாங்கிக்கொள்கிறேன்.

ரா. என்ன! இதற்குள்ளாகவா? அது உதவாது, உள்ளே போய் தாயாரைப் பார்க்கவேண்டாமா?

கோ. முன்பே—அதாவது—நான்—

ரா ஆனால் சரிதான்—அர்த்தமாகிறது—மறுபடியும் பார்க்கிறேன்—ஒருசமயம். சுப்பா—ஏனடா இங்கே இருக்கிறாய்? போய் வயித்தியரை உள்ளேவரச்சொல்.

[சுப்பன் போகிறான்.]

கோ. நான் தினம் வந்து பார்த்துக்கொண்டு போகிறேன். எனக்கு வேறென்ன வேலையிருக்கிறது?

ரா இருந்த போதிலும் நீங்கள் என்மீது வைத்திருக்கும் பட்சத்துக்காக உங்களுக்கு நான் அதிகசிரமம் கொடுக்கலாகாது; உங்களுக்கு அந்த கஷ்டம் வேண்டாம். நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்—அதாவது, எனக்கேதாவது நேர்ந்தால். ஆயினும் என்னைப்பற்றி அதிகமாகக்கவலைப்படாதீர்கள்; இதற்குள்ளாக நான் சாகமாட்டேன்—

நான் சீக்கிரத்தில் சாகிறவனுக எனக்குத் தோற்ற வில்லை—ஆதலால் உங்களுக்குக்கவலை வேண்டாம், வயித்தியர் வருகிறார் போலிருக்கிறது.—போய்வாருங்கள்.

[கோபிநாத்ராவ் போகிறார்.]

ஏழை—பாவம்!

வயித்தியர் வி. வி. நாயுடு வருகிறார்.

வாருங்கள் டாக்டர், உட்காருங்கள்; விசேஷவர்த்தமானங்கள் எல்லாம் என்ன? என்னுடைய தாயாதி—இப்பொழுது தான் போனாரே—அவருடைய முகத்தைப்பார்க்கிலும் உங்கள் முகம் நிகளமாயிருக்க வேண்டியகாரணம் என்ன?

வ. எதற்காகவந்தார் அவர் இங்கே?

ரா நான் சிக்கிரம் சாகப்போகிறேன் என்று—அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

வ. இந்த மாதிரி உமக்கு யார் சொன்னது?

ரா. கொஞ்ச நாழிக்கு முன்பாக மூன்று முழம் நிகளம் இருந்த உமது முகம்!

வ. என் முகத்தை நீர் வர்ணித்தது எனக்கு நகைப்பை யுண்டாக்குகிறது!

ரா. ஆனல் அது நிகளத்தில் குறுகி அகலத்தில் அகலும்!

வ. அதிருக்கட்டும், உம்முடைய அருமையான ஞாதிக்கு நீர அசௌக்கியமாயிருப்பதாக யார் தெரிவித்தது?

ரா. அசௌக்கிய சமாசாரம், கெடுதியான சமாசாரம் அல்லவா! ஆகவே சடுதியிற் பரவுகிறது; ஊர் எங்கும் தெரிந்திருக்கிறதே இது, என் அன்புடைய தாயாதி மாத்திரம் அறியக்கூடாதா என்ன?

வ. நீர் மிகவும் அசௌக்கியமாக இருப்பதாகக் கேள்விப் பட்டதாகச் சொன்னாரா என்ன?—யார் அவருக்குச் சொல்லியிருக்கக்கூடும் என்று ஆச்சரியப் படுகிறேன்.

ரா. வேறுயாராயிருக்கக்கூடும், அவரது கோரிக்கையோ அல்லது எனது வயித்தியர்களோ?

வ. இதைப்பற்றி நான் ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசவில்லை; நான் நேராகப்பட்டணத்திலிருந்து வருகிறேன் வாஸ்தவத்தில், நான் உள்ளே வரும் பொழுது, இந்த அறையின் கதவோரம் நின்று கொண்டிருந்த உங்கள் தாயார், என்னிடமிருந்து எதாவது ஆழ்ந்தறிய வேண்டுமென்று பார்த்தார்கள்; ஆயினும் நான் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ரா. அங்கே இருந்தார்களா அவர்கள்?—டாக்டர், என் தாயார், தான் ஆழ்ந்தறியும்படியாக அவ்வளவு ஆழமான மனதுடையவர் நீர் என்று உம்மை எண்ணும்படியான அப்படிப்பட்ட, மூடபுத்தியுடையவர்கள் என்று எண்ணு தீர். தான் அறிய விரும்பும் சமாசாரங்கள் எல்லாம் இந்த நிமிஷம் அறிந்திருக்கிறார்களென்று நான் உறுதியாய்க் கூறுவேன்.

வ. உம்முடைய தாயாரை நீர் எவ்வளவு வேண்டுமென்ரு லும் புகழலாம், ஆயினும் என்னிடமிருந்து அவர்கள் ஒன்றும் தெரிந்து கொள்ள வில்லை.

ரா. வாஸ்தவம்.—அதற்குச் சந்தேகமென்ன?-அதிருக்கட்டும் என்னைப்பற்றி என்ன சமாசாரம்? விருதாவில் காலம் போக்குகிறோம் என்னமுடிவிற்கு வந்திருக்கிறீர்கள்?

வ. முடிவிற்கா?—அப்படியிருந்தால் நலமாயிருக்கும்.

ரா. டாக்டர், ஏன் இப்படி ஏதோ மறைத்துப் பேசுகிறீர்கள்? நான் சாகவேண்டுமென்று நீங்கள் எல்லாம் தீர்மானித்

திருக்கிறீர்களா, இல்லையா? இன்னும் எத்தனை நாள் நான் உயிருடன் இருக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறீர்கள்?

வ அப்படி அபாயகரமானது ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன்; இருந்த போதிலும்—

ரா. இருந்த போதிலும்—என்ன? டாக்டர், நான் ஒரு குழந்தையல்ல வென்பது நீர் நன்றாய் அறிந்த விஷயம்; எனக்கு வயது மாயிற்று, தைரியமுமுண்டு; என் வாழ் நாட்களை நான் வாழ்ந்தாயிற்று; வெளிப்படையாய்ச் சொல்லுகிறேன், இவ்வுடலை நான் வெறுக்கிறேன்; இந்த உடலும் என்னை வெறுக்கிறதோ என்பது தான் கேள்வி, அவ்வளவு தான். நான் சித்தமாயிருக்கிறேன். எனக்கு பயமொன்று மில்லை. எல்லோரும் போகவேண்டியவர்கள் தானே—சீக்கிரத்திலோ, பொறுத்தோ! எப்பொழுது போனால் என்ன? டாக்டர், சங்கோசப் படாதீர். ஆண் பிள்ளையாயிரும், என்னையும் ஆண் பிள்ளையென மதியும். இன்னதென்று சொல்லும் எனக்கு. வாஸ்தவமாய்ச் சொல்லும், எல்லாவற்றையும்—தயவுசெய்து.

வ. உங்களைப்போன்ற நோயாளிகளுடன் நடந்து கொள்வது கஷ்டம்!

ரா. பிணியாளி பொறுமையை ஆளமுடியுமோ? நோயின் குணம் நாயின் குணம், என்று தாம் கேட்டதில்லையா?

வ. வாஸ்தவம் தான். வயித்தியர்களும் பொறுமை கற்க வேண்டியிருக்கிறது—எவ்வளவு பொறுக்கவேண்டியிருக்கிறது அவர்கள் மற்றவர்களிடமிருந்து!

ரா. டாக்டர், தாங்கள் பெரியமனுஷ்யர் ஆதலால், மொத்ததில் தாங்கள் கூறியவார்த்தையில் என்னையும் உட்படுத்திக் கூறவில்லை யென்று நான் நம்புகிறேன்; ஏதோ நான்

கொடுத்த கொஞ்சம் பணமன்றி, வேறெதையும் என்னிடமிருந்து தாங்கள் பொறுக்கும்படியாக நேரிடவில்லை எனக்கோருகிறேன்.

வ. பணம்!—பணத்துக்காக யார் பாடுபடுகிறது? நாங்களெல்லாம் எங்கள் கலாசாஸ்திரத்திற்காகக் கஷ்டப்படுபவர்கள்; எங்கள் உத்தியோகம் உலகில் மிகவும் உத்தமமானது; நாங்கள் ஊதியத்திற்காக உழைக்கும் மருந்துக்கடைகளிலிருக்கும் மருந்து செய்யும் மனிதர்களல்ல, விற்பனை செய்யும் வாணிபர்களல்ல; எங்கள் தேக சவுக்கியம், எங்கள் சுகம், எங்கள் உயிர், எல்லாவற்றையும் மற்றவர்களுடைய உயிரையும் தேகசௌக்கியத்தையும் சுகத்தையும் காப்பதற்காக, பலிகொடுக்கிறோம்! உலகத்திலுள்ள மனிதவர்க்கமனைத்தையும் காப்பாற்றும் பொருட்டு கடவுள் எங்களைப் பொறுப்பாளிகளாக நியமித்திருக்கிறார்.

ரா. இந்த உபந்யாசத்தைக் கேட்டபிறகு, எனக்கு ஆயிரம் உயிர் இருந்த போதிலும் அவையனைத்தையும் உம்மிடம் அடைக்கலமாக வைக்கவேண்டியவன் தான்!—சரி—இப்பொழுது என்னை என்ன செய்யவேண்டுமென்கிறீர்?

வ. ஒன்றும் அதிகமில்லை—கடைசியில் ஒன்றுமில்லாத தாய் முடிந்தாலும் முடியும்; நாம் ஆலோசித்த மற்றவயித்தியர்கள் ரணசிகிச்சையினால் தான் சுவஸ்தமாக வேண்டிய வியாதி இது என்றும், அதுவும் உடனே தாமதியாமல் செய்ய வேண்டுமென்றும், தீர்மானித்து விட்டார்கள்.

ரா. எதற்காக? என்ன வியாதிக்காக ரணசிகிச்சை செய்ய வேண்டும்? இன்ன வியாதி என்று கண்டறிந்தார்களா? இந்த நோய்க்குக்காரணம் என்னவென்று சொல்லுகிறார்கள்?

வ. அது தான் முக்கியமான விஷயம்! என்ன தான் கற்றறிந்தவர்களாயிருந்த போதிலும், இந்த வயித்திய சாஸ்திரம் கற்காதவர்களுக்கு இதொன்றும் அர்த்தமாகாது; ஆயினும் இந்த நூற்றாண்டின் முற்பாகத்தில் இருந்த வயித்தியர்களைவிட நீங்கள் அறியாதவர்களல்ல. அவர்கள் இன்ன அங்கத்தில் ஏதோ இருக்கிறதென்று சந்தேகித்து, அதற்காக அவ்விடத்தில் ரணசிகிச்சை செய்வது, அவர்கள் வழக்கம். அது வண்டியைக் குதிரையின் முன் பூட்டுவதொக்கும்; தற்காலத்தில் நாங்கள் ரணசிகிச்சை செய்து பார்த்து, பிறகு என்ன தப்பிதமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கிறோம்.

ரா. சுருக்கிச் சொல்லுமிடத்து, நீங்கள் அறுத்துப் பார்த்து பிறகு நோய் என்ன காரணத்தினால் உண்டாயது என்று கண்டறிய வேண்டும் என்கிறீர்?

வ. அவ்வளவுதான் அது. அதுவுமல்லாமல் இதில் இந்த ஒரு பெரிய அநுகூலமும் இருக்கிறது; ஒரு முறை ஜாக்கிரதையாக எல்லாவற்றையும் பரீட்சித்துப் பார்த்து அங்கங்களையெல்லாம் சுத்தம் செய்து சரியாக அமைத்து விட்டால்—அதாவது உடல் முழுவதையும் சீர்திருத்தம் செய்துவிட்டால்—மோடார் வண்டியை சீர்திருத்துவது போல்—பிறகு ஒரு கஷ்டமும் இராது. நீங்கள் அநேக வருஷங்கள் உயிருடன் வாழலாம்.

ரா. [எழுந்திருந்து] அடடா! வயித்தியரே, இந்த உடல் முழுவதும் சீர்திருத்தம் பார்ப்பதைப் பற்றிக் கேட்க ஆநந்த பரவசமாகிறதெனக்கு! வாஸ்தவத்தில், எங்கே சாதாரணமான பழய காலத்திய சமாசாரம் ஏதாவது சொல்லப் போகிறீர்களோ என்று பயந்திருந்தேன். அப்பா!—என் கவலை விட்டது! உம்—என் குழந்தை—என் ஒரே பெண், இப்பொழுது இங்கு இல்லையென்று உமக்குத் தெரியுமே; அவளை வரும்படி தந்தி கொடுத்திருக்கிறார்க

ளென்று நினைக்கிறேன். என்னை இவ்வுலகத்தில் நடமாடும்படிச் செய்யும்படியான சக்தி அவள்தான்—உம்முடைய உபமானத்தையே எடுத்துக்கொண்டு, இந்த மோடார் வண்டியைஓடச்செய்கிறவள், அவள்தானென்று கூறலாம். நீங்கள் என் உடலை யெல்லாம் பரிசோதித்து சீர்திருத்த உங்களுக்கு உத்தரவு கொடுக்குமுன், அவளுடைய அபிப்பிராயத்தையும் அறிய விரும்புகிறேன். இன்றிரவு அவள் இங்கு வருவாள். என்னுடைய முடிவான தீர்மானத்தை நாளை காலை உங்களுக்குத் தெரிவித்தால் போதாதா? அது வரையில் பொறுக்க முடியாதா?

வ. உம்—முடியும் என்று நினைக்கிறேன்—ஆயினும் எவ்வளவு சீக்கிரத்தில் இதை முடிக்கிறோமோ அவ்வளவும் நல்லது; காலஹரணம் அபாயகரமாகும்.

ரா. அது சரிதான் டாக்டர், என்னுடம்பில் என்ன கெடுதியிருக்கிறதென்று அவர்கள் சந்தேகிக்கிறார்களென்று நீங்கள் என்னிடம் இன்னும் சொல்லவில்லையே?

வ. சந்தேகப்படுகிற காலமெல்லாம் அப்பொழுதே போய்விட்டது; தற்காலம் சாஸ்திரங்களுக்குறிய காலம். நாங்கள் பரிசோதித்துப் பார்த்து பிறகு கண்டுபிடிக்க வேண்டும் ஆயினும், இது, ஜலத்தைச் சுத்தம் செய்வதற்காகக் கட்டியிருக்கும் புதிய கட்டிடங்களினால் அடிவயிற்றிலுள்ள அநேக அங்கங்களில் உண்டான ஓர்வித நூதனமான உறுப்பு சம்பந்த மில்லாத வளர்ச்சி யென்று எண்ணுவதற்கு ஹேதுக்கள் இருக்கின்றன. வயித்தியர்களாகிய நாங்களெல்லோரும் ஆரம்ப முதல் அக்கட்டிடங்கள் சரியாகவில்லை என்று கண்டித்தோம்.

ரா. உம்! என்ன துர் அதிர்ஷ்டம்'-ஒரு வேளை இந்த ரணசிகிச்சைசெய்யா விட்டால்—இந்த நோயை சகித்துக் கொண்டு வாழ்வதானால்— எத்தனை காலம் உயிருடன் இருக்கலாம்?

வ. அது யாரால் சொல்ல முடியும்? சில மணி நேரம்தான் இருந்தாலுமிருக்கலாம்; அல்லது சில தினங்களிருக்கலாம், வாரங்களிருக்கலாம், அல்லது மாசங்களிருக்கலாம்; ஒரு வேளை சில வருஷங்களிருந்தாலும் இருக்கலாம்.

ரா. ஒரு நிச்சயமாய்த்தான் சொல்லுகிறீர்கள்! இருந்தபோதிலும், எது சீக்கிரம் முடிவை உண்டுபண்ணும்?

வ. வயித்திய சாஸ்திரம் படிக்காதவர்களுக்கு இந்த விஷயங்களெல்லாம் விவரமாய்ச் சொல்வதென்றால் கஷ்டமாயிருக்கும். இந்த உயிர் நிலைத்திருப்பதே, இயக்கமில்லா வஸ்துக்களின்மீது இயக்கமுடைய வஸ்துக்கள் அடையும் வெற்றியே, என்று தாங்கள் கவனிக்க வேண்டும் ஆயினும், எப்பொழுது, இயக்கமில்லா வஸ்துக்கள் பெருகி, சேதனத்துக்கு இருப்பிடமாகிய மூளையையடைகிறதோ, அசேதனத்திற்கு இடங்கொடுக்கும்; அதன் பிறகு—அதன் பிறகு-பிழைப்பது கடினமெனக் கைவிட வேண்டியதுதான்.

ரா. இப்பொழுது எல்லாம் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது எனக்கு! டாக்டர், உங்களுக்கு மிகவும் வந்தனம்—ஆ! டாக்டர், ஒரு சமாசாரம் உங்களுக்குச் சொல்ல மறந்தேன்; என்னிடம் மிகவும் பட்சமுடைய என் வேலைக்காரன் சுப்பன், நேற்றிரவு கொஞ்சம் சிற்றுமணக்கெண்ணெய்ச் சாப்பிடும்படிச் சொன்னான்; காலையில் அதன் குணத்தைக் கொஞ்சம் காட்டியது, அது முதல் கொஞ்சம் சுவஸ்தமாகவும் இருக்கிறது எனக்கு, ஒரு வேளை அதனால்—

வ. ஓ! அதெல்லாம் ஒன்றுமில்லை! அசாத்தியமான காரியம்! மலப் பிரவர்த்தியுண்டானதால் வயிறு கொஞ்சம் தளர்ந்திருக்கலாம்; ஜலத்தை சுத்தப்படுத்த ஏற்படுத்திய நம்முடைய புதிய கட்டடங்களினால் உண்டான

கோளாறு என்று நான் உறுதியாய்ச் சொல்வேன். சிற்ப சாஸ்திரிகள் வயித்தியர்களுக்கு வழி கற்பிப்பதென்றால்! — இந்த பலன்தான் கிடைக்கும்!

ரா. கொஞ்சம் பொறுமையுடன் இருங்கள் டாக்டர், இந்த பெரிய ரண சிகிச்சை நீங்கள் செய்து முடிந்ததும், சிற்ப சாஸ்திரிகளின்மீது பழி வாங்கினவர்களாவீர்கள்.

வ. அதைத்தான் நான் கோருகிறேன்; அப்பொழுது உலகமெல்லாம் இவ்வுண்மையை அறியும் என்பதற்கு நான் சந்தேகப்படவில்லை.

ரா. டாக்டர், அதிர்ஷ்டம் உங்கள் பக்கமிருக்குமாக!—பிறகு —சரி, நாளைகாலை-ஒன்பது மணிக்கென்று சொல்வோம்-- நான் என் மோடார் வண்டியை அனுப்புகிறேன்—வாருங்கள்.

வ. வருகிறேன். [போகிறார்.]

ரா. வாஸ்தவத்தில்—நான் மிகவும் அசௌக்கியமாயிருக்கக் கூடுமா? என்ன ஆச்சரியம்!—ஜலத்தைச் சுத்தஞ் செய்யக் கட்டப்பட்ட புதிய கட்டிடங்களினால் இது உண்டாச்சுதா?—யாருக்குத் தெரியும்?

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி.

ராமசந்திரராவ் பஹதூர் வீட்டில் மற்றொரு அறை.
ஒரு பென்சும் இரண்டு பழைய நாற்காலிகளும் தவிர
வேறு ஒரு சாமானும் அறையில் இல்லை.

காலம்:—சாயங்காலம்.

சுந்தரிபாய் பென்சின்மீது உட்கார்ந்திருக்கிருள்;
வயதானவள்; வெள்ளை வஸ்திரம் அணிந்து
மூக்குக் கண்ணுடி போட்டுக்கொண்டிருக்கிருள்;
கையில் ஒரு தடி பிடித்திருக்கிருள். கிரிஜாபாய் எதிர்த்த வண்ணம்
கொஞ்சம் தூரத்தில் நின்றுகொண்டிருக்கிருள்.

சு. ஆனால், கோபிநாத ராவின் பிள்ளையை நீ ஸ்வீகாரம் செய்து கொள்ளமாட்டாய்?

கி. நான் மாட்டேன்! அந்தப் பிள்ளையையாவது—வேறு எந்தப்பிள்ளையையாவது! அப்படி நான் கட்டாயமாய் ஸ்வீகாரம் செய்து கொள்வதானுல் என் தங்கையின் பிள்ளையைத்தான் எடுத்துக்கொள்வேன்.

சு. உன் தங்கையின் பிள்ளையையா! வெகு அழகுதான்! புரோகிதன் பேரப்பிள்ளையை ராஜாக்களின் சிம்மாசனத்தில் உட்காரவைக்க வேண்டியதுதான்!

கி. புரோகிதன் பேரப்பிள்ளை விஷப்பாம்பின் குட்டியைவிட விசேஷம்தான்!—நான் மாட்டேன்! இந்த உலகத்தில் ஏதுவும் இதற்கு என்னை இணங்கச் செய்யமுடியாது.

சு. ஆனுல், உன் புருஷன் கண்ணை மூடிக்கொண்டவுடன், கவர்ன்மெண்டார் இந்த ஜமீன்தாரியை எடுத்துக்கொள்

ளப் போகிறார்கள்! பிறகு நீயும் நானும், இரண்டு விதவைகள், இப்பொழுது நம்மைப் பூசிக்கின்ற ராஜம்பேட்டையில், தெருத்தெருவாய் காலால் நடந்து பிச்சையெடுக்க வேண்டியதுதான்!

கி. இல்லை! அப்படி ஒருகாலும் நடவாது. இதெல்லாம் பொய்யான வெருட்டுகை என்று நான் அறிவேன். இங்கிலீஷ் ராஜாவானவர் நிரம்ப நல்லவர், பட்சமுடையவர், என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். லாயர் பீதாம்பரையர்கூட, அப்படி ஒன்றும் நேரிடாதென்று என்னிடம் சொன்னார். உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் ஏன் சொல்லக்கூடாது ஒரு உயில் எழுதும்படி ?

சு. உயிலா!—பிறகு கோர்ட்டுக்குப் போய் சண்டை போடவா! வேறு என்னத்துக்கு உபயோகம் இந்த உயில்? அந்த பெத்த செட்டியார் ஒரு உயில் எழுதிவைத்தார்—லாயர்களெல்லாம் அவர் ஆஸ்தியை யெல்லாம் பங்கிட்டுக்கொண்டார்கள்!

கி. ராஜம்பாளையப் ஜமீன்தார் தன் சொந்த சகோதரன் பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார், பிறகு அந்தப் பையன் தாயாரை வீட்டைவிட்டு ஓட்டி விட்டான்!

குப்பன் சற்று தூரத்தில் வருகிறான்.

சு. என்ன நல்ல பதிவுடைய பாட்டுப்பெண், இப்படி தன் சொந்த மாமியாருடன் தர்க்கம் பேசுகிறவள்! ஏட்டிக்குப் போட்டி! ஏட்டிக்குப் போட்டியா! ஐயோசாமி! என்ன காலம் வந்துவிட்டது! கலிமிஞ்சிப் போச்சுது. உலகமெல்லாம் கிறிஸ்தவமாகவும் நாஸ்திகமாகவும் ஆகிவிடுமோ! இந்தக் காலத்தையும் பார்த்துக்கொண்டு உயிரோடிருக்கிறேனே! என் புருஷன் போனபொழுதே நானும் ஏன் போகவில்லை!

கி. ஏன், ஏன் அப்படி செய்யவில்லை?-நான் ஏதாவது வேண்டாமென்று தடுத்தேனு? [சுப்பன் போகிறுன்.]

சு. ஐயோ!—என்ன பேசுகிறுயடி! என்ன காலம் என்ன காலம்! ஆண்பிள்ளைகள் பேசுகிறுர்கள், பெண்பிள்ளைகள் பேசுகிறுர்கள்—எல்லோரும் பேசுகிறுர்கள்! அது தவிர ஒருவரும் வேருென்றும் செய்வதில்லை!

கி. நாங்கள் எல்லாம் பேசுவதில் சாமர்த்தியமுடையவர்கள், சந்தேகமில்லை—நீங்கள் செய்து முடிப்பதில் சாமர்த்திய முடையவர்கள்! இல்லாவிட்டால் இந்தப் பதினுறு வருஷங்களாக இந்த வீட்டில் காலை வைக்காத ஒரு பகையாளி இன்று காலை இங்கே வரும்படி எப்படி நேர்ந்தது?

சு. என்னவென்றுலும் அவன் இந்தக் குடும்பத்திற்கு தாயாதி தானே; அந்தச் சீமான் மாதவராயருடைய நேர் பரம்பரையில் வந்தவன் தானே? என் பிள்ளைக்கு ஏதோ அசௌக்கியமென்று கேள்விப்பட்டு அவனைப் பார்க்க வந்தாற் போலிருக்கிறது. அதில் தவறென்ன ?

கி. இரகசியமாக ஒரு மணி சாவகாசம், உங்கள் அறையில் அவருடன் நீர் பேசிக்கொண்டிருப்பதில் என்ன தவறு? அல்லது உங்கள் பிள்ளையின் அறையின் கதவோரம் நின்று கொண்டு அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று கேட்பதிலும் என்ன தவறு? உங்கள் பிள்ளை இதை அறிந்தால் இதைப் பற்றி என்ன சொல்லுகிறுரோ பார்ப்போம்!

சு. என்ன பொய்கள்! என்ன பொய்கள்! ஆ! இந்த உலகமே பொய்யா யிருக்குமா இப்படி!

ராமசந்திர ராவ் பஹதூர் வருகிறுர்.

ரா. என்னத்திற்காக இந்தக் கூச்சல் எல்லாம்?—ஏதாவது சண்டை போடுகிறீர்களா என்ன?—என்ன சமாசாரம் ?

சு. ஆ!—அதெல்லாம் நாங்கள் சண்டை யொன்றும் போடவில்லை—ஏன் கிரிஜா சண்டையா போட்டோம் நாம் ?

கி. அதொன்றும் கிடையாது ! நாங்கள் சண்டை போட வில்லை.

ரா. ஆனால் வீட்டில் இரண்டு பெயரும் சந்தோஷமாய் சல்லாபம் செய்துகொண்டிருந்தீர்களோ?—ஆயினும் ஏதோ பொய்யைப் பற்றி பேசிக்கொண்டிருந்தாற்போலிருக்கிறதே, யார் அது ?

சு. இந்த உலக முழுதும் பொய்யாயிருக்கிறதென்று வெறுமே சொல்லிக்கொண்டிருந்தேன்.

ரா. அப்படியா ? என்ன உண்மை ! அது மாத்திரம் மிகவும் உண்மையாகத்தான் தோன்றுகிறது. இந்த ஒரு தினத்துக்கு இவ்வளவு சல்லாபம் போதுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா ? வீட்டு வேலை என்று ஒரு காரியம் இருக்கிறதே என்று யோசிக்கிறேன்.

சு கிரிஜா, அந்த சுப்பன்தான் இந்த வேலை செய்திருக்க வேண்டும்.

கி. வேறு யார் மாமி ? வாருங்கள்—நாம் போவோம் !

[போகிறார்கள்.]

ரா. அடடா ! மாமியாரும் மாட்டுப் பெண்ணும் என்ன ஒற்றுமையோடிருக்கிறார்கள் ! இருவருக்கும் நான்தான் விரோதிபோலும்!

[போகிறார்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்

இரண்டாம் காட்சி.

இடம்:—லாயர் பீதாம்பரையர் வீட்டில் அவருடைய
பிரத்யேகமான உத்தியோக அறை.

காலம்:—சாயங்காலம் விளக்கு வைத்த பிறகு.

பீதாம்பரையர் தன் மேஜையின் அருகில் உட்கார்ந்திருக்கிறார்.
கிரிஜாபாய் கொஞ்சம் தூரத்தில் நின்று கொண்டிருக்கிறாள்.
அறை முழுவதும் காகிதங்களும் புஸ்தகங்களும்
அலங்கோலமாய்க் கிடக்கின்றன.

பீ. ஜமீன்தார் அவர்களே—நீங்கள் சொல்லுகிறபடி—ஒரு உயில்—எழுதிவைக்கும்படியாகச் செய்கிற விஷயத்தில்—அநேககஷ்டங்களிருக்கின்றன—ஆன போதிலும் பார்ப்போம்.

கி. தாங்கள் அவ்வளவு தயவுசெய்தால் அதை என் ஆயுசு பர்யந்தம் மறக்க மாட்டேன்; எல்லோருக்கும் அதனால் அதிக பிரயோஜன முண்டு.

பீ. பிரயோஜனத்தைப் பற்றி—பேசுவானேன்? அது—என் கடமையாகும்.

கி. கடமையும் பிரயோஜனமும் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்தால் இன்னும் அதிக நலமல்லவா?

பீ. சந்தேகமென்ன! இந்த ஏழை வீட்டிற்கு—தாங்கள் இவ்வளவு தூரம் வரும்படியான கஷ்டம்-எடுத்துக்கொண்டீர்களே யென்று—எனக்கு விசனமாயிருக்கின்றது; ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால்—எப்பொழுது

வேண்டியபோதிலும்—நான் தங்கள் மாளிகைக்கு வந்திருப்பேனே! என்றால் என்ன முடியுமோ—அதை முயன்று பார்க்கிறேன். ஆயினும்—ஜமின்தார் அவர்கள் மிகவும் பிடிவாதக்காரர்—என்பதை நீங்கள் அறிந்தேயிருக்கிறீர்கள்.

கி. அதற்குச் சந்தேகமென்ன? இந்த முப்பத்தைந்து வருஷங்களாக நான் அவரை அறியாதவளா என்ன? அதனால் தான் இவ்விஷயத்தில் உம்முடைய உதவியை நான் நாடவேண்டி வந்தது. நான் உங்களைத்தான் முற்றிலும் நம்பியிருக்கிறேன். ஆயினும், நான் உங்களுக்குச் சொன்னபடி, நான் உங்களிடம் வந்து அபிப்பிராயம் கேட்டவிஷயம், அநேக காரணங்கள் பற்றி, நான் இருக்குமிடம் ஒருவருக்கும் தெரியக்கூடாது; வாஸ்தவத்தில், எங்கள் பக்கத்துத்தெருவில் அசௌக்கியமாயிருக்கும் என் தங்கையைப் பார்க்கப் போகிறேன் என்று சாக்கு சொல்லி வீட்டைவிட்டு வந்தேன். நான் தெரிவித்ததெல்லாம் லாயர் அவர்களுக்குத்தான். அது அவரைவிட்டு வெளியே போகாதென்று நம்புகிறேன்.

பீ. அதைப்பற்றி கவலைவேண்டாம்! லாயருக்கு என்று ஏதாவதொன்றை நினைத்தால்—அது அவரை விட்டு வெளியே போகாது!

கி. நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன், என் மாமியார் விஷயத்தில்.—

சுந்தரிபாய் வருகிறாள்.

சு. என்ன, உன் மாமியார் விஷயத்தில்? நீயா அது கிரிஜா! ஆஹா! இங்கேயா இருக்கிறாய்நீ? இப்படியும் இருக்குமா? உன் மாமியாரைப் பற்றிய விஷயமா? நான் காதாற் கேட்டது வாஸ்தவமாயிருக்குமா? நான் வந்ததை நீபார்த்தாயா? என்ன செய்து கொண்டிருந்தாய் இங்கே?

கி. லாயர் பீதாம்பரையரிடம், நான் உங்களைப்பற்றி சொல்லிக்கொண்டிருந்த நல்ல சமாசாரங்களையெல்லாம் உமது முகத்திற்கெதிராகத் திரும்பிச் சொல்வது நல்லதல்ல. எனக்குக்காலமாகிறது. நான் போகிறேன்.

சு. நீ எதற்காக இங்கே வந்தாய்?

கி. நீர்வந்த வேலையாகத்தான் நானும் வந்தேன்; எனக்கும் அதேபோக்குத்தான்; அதற்குச் சந்தேகமில்லை!

சு. ஓ! அதே வேலையா! நான் என்ன வேலையாக இங்கு வந்தேன் என்று உனக்குஎன்ன தெரியும்? பீதாம்பர ஐயருடைய தங்கை, சின்னவயதில் என்னுடன் பள்ளிக்கூடத்தில் படித்தவள், அவளுக்கு ஏதோ உடம்பு அசௌக்கியமென்று கேள்விப்பட்டு, அவளைச்சும்மா பார்த்துவிட்டுப் போகவந்தேன்.

கி. என்னபட்சம்! அதற்காகத்தான் இவருடைய கச்சேரி அறைக்கு நேராகவந்தீர்களோ?

சு நீயார் என்னைக்கேட்பதற்கு? நான் வீட்டிற்குள் நுழையும் பொழுது, இந்த அறையில் உன் குரலைப்போல் கேட்டேன்; அது எனக்கு ஆச்சரியத்தையுண்டு பண்ணுமோ இல்லையோ என்று நீயே யோசித்துப்பார்க்கலாம்! நான் உடனே உள்ளேவந்தால்—நீ இந்த அறையில் லாயருடன் இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறதைக்காண்கிறேன்! இதன் காரணத்தைக் கேட்டு உன் கணவன் சந்தோஷப்படுவான் என்பதற்குச் சந்தேகமில்லை!

கி. அப்படியானால் லாயர் பீதாம்பரையரே என்னுடன் பள்ளிக்கூடத்தில் ஒன்றாய்ப்படித்தவர்; இது என்னவோ உண்மை.

பீ. அம்மா, இம்மாதிரியாக—நீங்கள் ஒருவர்மீதொருவர்—குற்றம்சாற்றப் பார்ப்பதுதகுதியல்ல. உங்கள் ஒவ்வொருவருக்கும்—மற்றவர் இங்கு வந்த வேலை நன்றாய்த் தெரியும். மறைக்கமுடியாததை—மறைக்கமுயலுவதில் என்ன பிரயோஜனம்? நம்முடைய வியவஹாரங்களில்—இப்பொழு திருப்பதைவிட—அதிக வெளிப்படையாயிருந்து—நாம் நமது சிறுவயது முதல் பிரியம் கொண்டிருக்கும்—கண்ணும் பூச்சியாட்டம்—கொஞ்சம் குறைவாயாடினால், இந்த உலகமானது—நாம் வாழ்வதற்கு இப்பொழு திருப்பதைவிட—மிகவும் மேம்பட்ட இடமாகும்.

கி. ஒவ்வொரு லாயரும் இப்படிப்பட்ட உத்தமமானபுத்திமதியைச் சொல்லுவதாயின் !

சு. ஒவ்வொரு மனிதனும் இப்படி வெளிப்படையாய் உண்மையைச் சொல்லுவதாயின் !

பீ. நீங்கள்—இரண்டு பெயரும் என்னவோ—நல்ல எண்ணத்துடன் தான்-இவ்வாறு கூறுகிறீர்கள் என்று உறுதியாய் நம்புகிறேன். ஆயினும்—என்னைப்பற்றி உங்களுடைய விசேஷமான மதிப்பைப்பற்றி—என் எதிரிலேயே நீங்கள் பேச—நான் கேட்பதென்றால் — அவ்வளவாக—அது சந்தோஷத்தைத் தரவில்லை எனக்கு.

கி. மதிப்புக்கடங்காததை யாரால் மதிப்பிடக்கூடும்? நான் வருகிறேன்.

பீ. ஒரு வினடி—அம்மா—உங்களிருவருக்கும் நான் சொல்ல வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. நான் இதைப்பற்றி யோசனை பண்ணிக்கொண்டிருந்தேன்—அதை உங்களுக்குச்சொல்ல-இது தான் சரியானசமயம்—என்று தோற்றுகிறது—நீங்கள் இரண்டுபெயரும் இங்கே இருக்கும் பொழுது. நீங்கள் கோருவது—கவர்ன்மெண்டார்—

ஜமீன்தாரிணியை எடுத்துக் கொள்ளாதபடி—உங்கள் பிள்ளை—ஒரு ஸ்வீகாரம்—செய்து கொள்ளவேண்டு மென்று ?

சு. அதே தான்.

பீ. அன்றியும்—கொஞ்சம் வெளிப்படையாகப் பேசுகிறேன் நான்—உங்கள் மருமகப்பெண் சவரட்சணைக்குக் காத் திருக்கவேண்டிய கட்டாயமில்லாதபடி—இருக்கவேண்டு மென்கிறீர்.

சு. அது போலத்தான்.

பீ. அம்மா, நீங்கள்—தூரபந்து எவனுவது சொத்தையெல் லாம்—தனக்குச்சேரவேண்டு மென்று—கேட்க இடமில் லாதபடி—உம்முடைய புருஷன்—ஒரு உயில் எழுத வேண்டுமென்கிறீர் ?

கி. அப்படியே தான் !

பீ. அன்றியும்—இல்லாவிட்டால்—ஜமீன் காரியங்களை யெல் லாம் பார்ப்பதில்—உமக்குத் தொந்திரவுக்கிடமாகும்.

கி. அது இன்னொரு காரணம்.

பீ இப்பொழுது—உங்களிருவருக்கும் திருப்திகரமாகும்படி —உங்கள் குடும்பத்திலேயே—ஜமீன் இருக்கும்படியா கவும்—ஒரு ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படியாகவும்— ஆனல் அது உடனே இல்லாதபடியும்,—நீங்கள் இரு வரும் ஒருவர் சவரட்சணையை—மற்றொருவர் எதிர் பாராதபடியும்—இருந்தும் இருவரும் ஒத்துமையாயிருக் கவும்,—ஒரு வார்த்தையில் சொல்லுமிடத்து—ஸ்வீகா ரம், உயில், இவ்விரண்டின் அனுகூலங்களெல்லாம் ஒன் ருய் உடையதாயும்—ஒன்றைச் செய்யும்படியாக—ஜமீன் தாரை—நான் ஒருவழிக்குக் கொண்டு வந்தால்—அது உங்களுக்கு எப்படி இஷ்டப்படும் ?

கீ. அது மிகவும் உத்தமமாயிருக்கும்!

சு. ஆனால் எந்தப் பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வது?

கீ. மிகவும் நன்றாய்த்தானிருக்கும்! ஆயினும் நான் இந்த சொத்துகளையெல்லாம் மேல்பார்வை பார்ப்பதெப்படி?

பீ. இம்மாதிரியான கேள்விகளெல்லாம்—என்னை—நீங்கள் கேட்கக்கூடாது. நான் ஒரு பெரிய யுக்தி பண்ணியிருக்கிறேன்—உங்களிருவருடைய நன்மைக்காகவே—இதை முடிவுபெறச் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கிறேன். உங்களுடைய லாயராகிய—என்னிடம் நீங்கள் முழு நம்பிக்கை வைக்கவேண்டும். நாளை காலை—அரண்மனைக்கு சுமார் ஒன்பது மணிக்கு வருகிறேன்-பிறகு ஒரு காரியம் செய்யப்போகிறேன், அதனால் உங்கள் ஆயுசு பர்யந்தம் என்னை மறக்கவேமாட்டீர்கள்! அதுவரையில்—நீங்கள் கொஞ்சம் பொறுமையுடன் இருக்கவேண்டும்'

சு. இந்த லாயர்கள் தான் என்ன புத்திசாலிகள்!

கீ லாயர்களிலும் லாயர்களிருக்கிறார்கள்!

காட்சி முடிகிறது.

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி.

இடம் :—முதல் அங்கத்தின் இடமே.

காலம்:—காலை.

ராமசந்திரராவ் பஹதூர் முன்பு போல் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்; உடம்புமுன்னைவிட சுவஸ்தமாய்க் காட்டுகிறது. அறையில் வேறொருவருமில்லை.

ரா. உடம்பு எனக்கு மிகவும் சுவஸ்தமாயிருக்கிறது. ஒரு வேளை நான் சாகாதிருந்தாலோ? எத்தனை பெயருடை கோரிக்கை கைகூடாமற் போகும்!

சுப்பன் வருகிறான்.

சு. எஜமானுக்கு, காலமே உடம்பு எப்படியிருக்கிறதோ? நேற்றுராத்திரி நான் கொண்டுவந்து கொடுத்த மருந்தை —எசமான் என்மனசு திர்ப்திக்காகச் சாப்பிட்டது— எசமானுக்கு ஏதாவது குணம்செய்ததோ ?

ரா. அது எனக்கு மிகவும் அனுகூலம் செய்தது சுப்பா, வாஸ்தவமாக எனக்கொன்றும் நோயே தெரியவில்லை— யார்கொடுத்தது சுப்பா அந்த மருந்தை உனக்கு ?

சு. காட்டுக் கப்புறமிருக்கிற மலையின் பேரில், ஒரு பெரிய சன்யாசி இருக்கிறார் என்று, எசமானிடம் அநேகம் தரம் நான் சொன்னது எசமானுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த உலகத்திலுள்ள எல்லா வியாதிகளுக்கும் அவருக்கு மருந்து தெரியும். எசமான் நோயினாலே கஷ்டப்பட்ட தைப்பார்த்த பொழுது—நான் ஓடிப்போய் அவர்காலில் விழுந்து, ஏதாவது மருந்து கொடுக்கும்படி வேண்டி

னேன். வெள்ளிக்கிழமை சாயங்காலம் வயித்தியர்கள் எல்லாம்கூடி ஏதோ ரகசியமாய்ப் பேசியதைப் பார்க்க எனக்கு பயமாய்விட்டது. எசமானுக்கு ஏதாவது— ஆனல்—நான் என்ன செய்யப்போகிறேன் ?

ரா. இந்த உலகத்தில் நீ தான் அப்பா என் உண்மையான சிநேகிதன்—என் குழந்தையைத் தவிரவைத்து.—ஏ! ஸ்டேஷனுக்கு என் மோடார் வண்டிபோச்சுதா அவளை அழைத்துவர ? மணி என்ன இப்பொழுது?—

பத்மினிபாய் மிகுந்த கலவரத்துடன் ஓடி வருகிருள்.

ப. அப்பா'—ஈசன் கருணை !

[சுப்பன் போகிருன்.]

ரா. என்ன குழந்தை?—என்ன சமாசாரம்? ஏன் இந்தக்கலக்கம் உனக்கு ?

ப. எனக்கு நிரம்ப சந்தோஷம் அப்பா ! நான் உங்களை உயிருடன் பார்ப்பேனே என்னவோ என்று பயந்தேன். அப்படிப்பட்ட தந்தி கொடுத்தார்கள் எனக்கு !

ரா. யாரோ கெட்ட அபிப்பிராயத்துடன் அனுப்பியிருக்க வேண்டும்; நான் சுவஸ்தமாயிருக்கிறேன் குழந்தை. இந்த இரண்டு தினங்களாக எனக்குக் கொஞ்சம் அசௌக்கியமாயிருந்தது உண்மை தான். வாஸ்தவத்தில் ஒன்றும் விசேஷமில்லை—அடிவயிற்றில் ஏதோ கொஞ்சம் நோயிருந்தது. நம்முடைய டாக்டர் நாயுடு சமாசாரம் தான் உனக்குத் தெரியுமே—பெரிய காபராக் காரர் என்று! எல்லோரும் சேர்ந்து அது மிகவும் பெரிய கஷ்டமான வியாதி என்று தீர்மானம் செய்து விட்டார்கள்.

ப. இப்பொழுது உங்களுக்கு எப்படி இருக்கிறது அப்பா?

ரா. எல்லாம் சுவஸ்தமாய் விட்டதென்று நினைக்கிறேன். யார் என்னை சுவஸ்தப்படுத்தியது தெரியுமா உனக்கு? நம்முடைய பழயவேலைக்காரன் சுப்பன்! நேற்றிராத்திரி— ஐந்து மயில்தூரம் ஓடிப்போய், அவனுக்கு தெரிந்த ஓர் சன்யாசியிடமிருந்து—எனக்கு ஒரு மருந்து வாங்கிக்கொண்டுவந்தான்—ஏதோ லேகியம். என்னை எப்படியாவது அதைச் சாப்பிடும்படி வேண்டினான். நானும் அவனைத்திர்ப்தி செய்வதற்காக அதைச் சாப்பிட்டேன்; நன்றாய்த்தூங்கினேன்; அரைமணிக்கு முன்பாகத்தான் எழுந்தேன். எழுந்தது முதல் எனக்கு நோயே காணோம்.

ப. வாஸ்தவமாகவா? என்ன நல்லவன் அவன்! வேலைக்காரனாயிருந்தபோதிலும் அவனிடமுள்ள அன்பும் ஆதரவும் மனதை எவ்வளவு உருகச்செய்கிறது! அவனை நான் கையெடுத்துக்கும்பிடலாம் போலத்தோற்றுகிறதெனக்கு.

ரா. ஆம்! நல்ல ஹிருதயமுடையவனே நானிலத்தில் தெய்வம்.

ப. அப்பா! நான் என்ன சந்தோஷப்படுகிறேன்!—எனக்கு என்ன வாயிருக்கும்—நான் வந்த பொழுது—நீங்கள்—

ரா. இறந்து கிடந்தால்? பிரக்ஞை இன்றி இறக்கும் சமயத்தில் இருந்தால்?—குழந்தை, இப்படி எல்லாம் நீ துக்கப்படலாகாது; நாம் எல்லோரும் இங்கிருந்து போகவேண்டியவர்கள் தானே—ஒருவர் பின் ஒருவராக. ஆகவே அந்த முடிவிற்கு நாம் எப்பொழுதும் சித்தமாயிருப்பதே தகுதி.

ப. அப்பா, ஏது நீங்கள் சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறபடி பேசுகிறீர்கள்! எப்பொழுது நீங்கள் வேதாந்தியானீர்கள்?

ரா. ஆவதென்ன? எப்பொழுதும் அப்படித் தானிருந்திருக்கிறேன். ஆயினும் குழந்தை, என் சுபாவத்தில் அந்த குணத்

தை நீ அறியும்படிச் செய்யவில்லை நான். உன்னுடன் இருக்கும்பொழுது எனக்கு எல்லாம் வேடிக்கை விநோதம் தான்—சூர்யனொளியும் சந்தோஷமும்.

ப ஆயினும் அப்பா, இவ்வுலகவாழ்க்கையானது புதிது புதிதான ஆச்சர்ய கரமான உணர்ச்சிகளை நமக்குண்டு பண்ணி, எப்பொழுதும் நாம் அதை விரும்பும்படிச் செய்கிறதல்லவா? இவ்வுலகில் எவரும் சாகவேண்டுமென்று விரும்புவானேன்? ஈசன் மரணம் என்பதை ஏன் உண்டுபண்ணினார்?

ரா. கண்ணே பத்மினி, எனக்குத் தோன்றுவது, அல்லது உனக்கு இப்பொழுது நான் கற்பிப்பது, நீ ஒப்புக் கொள்ளாத விஷயமாயிருக்கலாம். ஆயினும் அதன் உண்மையை ஒரு காலத்தில் நீயே உணர்வாய். நீ அன்றைத்தினம் ஜாலவித்தை பார்த்தாயே—அது போலத்தான்—செப்படிவித்தை. முதல் முதல் உனக்கு எவ்வளவு ஆச்சரிய கரமாயிருந்தது! கால அளவில் நமது கண்கள் உலகமெனும் ரங்கத்தில் எதிரில் வைத்திருக்கும் விளக்குகளின் ஒளிக்கு வழக்கப்பட்டுப் போகின்றன; அல்லது நமது கண்களின்மீது ஒளிநேராகப்படாவண்ணம் மறைத்துப்பார்க்கும் யுக்தியைக் கற்றுக்கொள்ளுகிறோம்; பிறகு மந்திரத்தினால் ஆகாயத்திலிருந்து மாங்காய் விழுகிறதில்லை என்று தெரிந்து கொள்ளுகிறோம்; இந்திர ஜாலக்காரனுக்கு, ரங்கத்தின் மீதில் கறுப்புடையணிந்த மனிதர்கள் உலாவுவதையும், அவன் வேண்டும் வஸ்துக்களைக் கொடுப்பதையும், கண்டறிகிறோம். பிறகு மாயை வெளியாகிவிடுகிறது. இதைப்போலவே கேவலமாகிய இவ்வுலகில் சம்பவிக்கும் காரியங்களின் உள்ளிருக்கும் உண்மையை ஒருவன் உற்றறிந்தவுடன், வெறுப்புண்டாகி, இதை விட்டு விருப்பதுடன் அகல சித்தமாயிருக்கிறான். ஆயினும் குழந்தையின் பொருட்டு அவன் இங்கேதங்கி இருக்க வேண்டியிருக்கிறது.

ப. அப்பா, உங்களைக் கடைசி முறை நான் பார்த்தபிறகு எவ்வளவு மாறியிருக்கிறீர்கள்!—இன்னும் பதினைந்து நாட்கள்கூட ஆகவில்லை!

ரா. இல்லை, கண்ணே குழந்தாய், நோக்கத்தின் குறிப்பின்றி வேறொன்றினும் மாறுதலில்லை. இவ்வுலகமானது எந்த வர்ணக்கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்க்கிறோமோ அந்த வர்ணமாய்த் தோன்றுகிறது.

ப. அப்பா, ஆனால் உமது கண்ணாடியை மாற்றிக்கொள்ளும்; இப்பொழுது நீர் உலகத்தை ஊடுருவிப் பார்க்கும் கறுப்புக்கண்ணாடி எனக்கிஷ்டமாயில்லை—எனக்காக தயவு செய்யும் அப்பா!

ரா. பத்மினி, உனக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ண எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்; நீ தான் இவ்வுலகத்தில் இன்னும் என்னை பந்தித்து வைக்கும் சூஸ்திரம்.

ப. அப்படியானால் உம்மை பந்தித்துவைக்க இரும்பினாலாகிய சூஸ்திரமாகிறேன் அப்பா.

ரா. ஏன்—பொன்னாலானது!

ப. உங்களிஷ்டப்படி!—அதிருக்கட்டும்—இன்னும் உமது முகத்தையேன் இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்பொழுது தான் சொன்னீரே நான் உம்முடன் இருக்கும்பொழுது, எல்லாம் வேடிக்கை விநோதம்தான் என்று; மறுபடியும் உங்களுக்கு ஏதாவது நோய் உண்டாகிறதா என்ன?

ரா. இல்லை குழந்தை—எனக்கு எல்லாம் சவுஸ்யமாகிவிட்டதென்று நினைக்கிறேன்.

ப. நான் வயித்தியருக்குச் சொல்லியனுப்பவா?

ரா. வேண்டாம் அம்மா! இப்பொழுது எனக்கு வயித்தியரே வேண்டியதில்லை—அன்றியும் ஒன்பது மணிக்கு இங்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

ப. டாக்டர் நாயுடுவோ அப்பா?—அவர் ரொம்ப நல்லவர் அப்பா! அவர் எப்படியும் முற்றிலும் சுவஸ்தப்படுத்தி விடுவார்.

ரா. அதற்குத் தான் முயன்றார் அவர், ஆனால் இப்பொழுது அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காது என்று எண்ணுகிறேன். அவர் கையினின்றும் தப்பித்துக் கொண்டேன் என்று நினைக்கிறேன்.

ப என்ன அப்பா அது? நீங்கள் சொல்வதொன்றும் எனக்கு அர்த்தமாக வில்லை—உங்களைத் தொடரமுடியவில்லை.

ரா. வேண்டாம், உன்னால் முடியுமானாலும்கூட, வேண்டாம். வாஸ்தவமாக நான் இந்த கஷ்டம் தப்பியது உண்மையானால், இந்த சமாசாரத்தை எல்லோரும் எப்படி ஏற்பார்கள் என்று ஆச்சரியப் படுகிறேன்.

ப. மிகுந்த சந்தோஷத்துடன்! அதற்கென்ன சந்தேகம் அப்பா?

ரா உன் கண்ணாடியின் மூலமாக உலகத்தைப் பார்ப்பதினால் உனக்கு அப்படித் தோன்றுகிறது.

ப. ஏன் அப்பா? வாஸ்தவமாய் உங்களுக்கு ஒருவரும் விரோதிகள் இல்லையே!

ரா. ஈசன் கருணை! நான் ஒருவரையும் விரோதியாக்கவில்லை. நான் பெரும்தூரம் யாத்திரை போகப்புறப்படுவதற்காக எவ்வளவு பெரிய ஏற்பாடுகளெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை நீ அறிவாயாயின்!

ப. எங்கே யாத்திரை போகவிருந்தீர் அப்பா?

ரா. எங்கு போனால், மறுபடியும் ஒருவரும் திரும்பிவருவதில்லையென்று இதுவரையில் எண்ணப்பட்டிருந்ததோ, அங்கு! ஆனால் தற்காலத்தில் சீமையில் அப்படி திரும்பி வந்தவர்களை அறிந்தவர்கள் சிலர் இருக்கின்றார்களாம்!

ப. ஆம் அப்பா, நீங்கள் படித்தீர்களா அதைப்பற்றி? என்ன ஆச்சரியமாயிருக்கிறது !—அதிருக்கட்டும். என்னமோ ஏற்பாடுகளெல்லாம் செய்ததாகச் சொன்னீரே, யார் செய்தது? நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புலப்படவில்லை.

ரா. கொஞ்சம் பொறு, இங்கு வந்து என் அருகில் உட்கார. பொறுமையுடன் நன்றாய்க்கவனித்து இவ்வுலகத்தை அறிய விரும்பு; பிறகு நான் கூறியதின் உண்மை உனக்கு அர்த்தமாகும்.

ப. நீங்கள் தான் சொல்லுங்களேன் அப்பா!

ரா. வேறொன்றுமில்லை குழந்தை. அநேகம் பெயர் நான் பிழைக்கமாட்டேன் என்று எண்ணினார்கள்; அவர்கள் கோரிக்கையெல்லாம் இப்பொழுது ஈடேறாது அவர்களெல்லாம் கவலைப்படுவார்களோ ஒருவேளை, என்பது தான்.

ப. வேண்டும் அவர்களுக்கு! அப்படிப்பட்டவர்கள் இருந்தால்!

ரா. வாஸ்தவத்தில் அறிய விரும்புகிறாயா? எனக்கொரு யோசனை தோன்றுகிறது. வெகுவேடிக்கையாக இருக்கும்! வயித்தியரும் லாயரும் என்னைப் பார்க்கவரப் போகிறார்கள்; இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்கள் இங்கு வந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன்; நான் இந்த சோபாவின்மீது படுத்துக்கொண்டு ஸ்மரணையிலலாதவனைப் போல பாசாங்கு செய்கிறேன். நீ எல்லோரிடமும், நீ வந்த உடனே நான் மிகவும் சந்தோஷப்பட்ட

தாகவும், பிறகு உடனே ஏதோமார்பிலும் தலையிலும் நோயெடுக்கிறதெனச் சொன்னதாயும், அதன் பேரில் என்னை இந்த சோபாவுக்கு அழைத்துப் போனதாயும், பிறகு நான் பிரக்ஞை தப்பிப்போனதாகவும் சொல்.— அதோ ஒரு வண்டிவருகிற சப்தம்! வாஇப்படி சீக்கிரம்!

ப. வேண்டாம் அப்பா! விளயாட்டுக்குக்கூட—

ஜ. ஒன்றும் பயப்படாதே குழந்தை!—பத்திரம்!

[சோபாவுக்குப் போய் அதன் மீது ஸ்மரணையற்றவர் போல் படுத்துக் கொள்ளுகிறார்.]

ப. சுப்பா! சுப்பா!

சுப்பன் வருகிறான்.

சு. என்னைக் கூப்பிட்டீர்களா அம்மா?

ப. நான் என்ன செய்யப்போகிறேன்! நான் வந்ததைப் பார்த்து அப்பா மிகவும் சந்தோஷப்பட்டு என்னுடன் பேசிக்கொண்டிருந்தார், உடனே திடீரென்று மார்பிலும் தலையிலும் ஏதோநோய் எடுப்பதாகச் சொன்னார்! உடனே மூர்ச்சையாய்ப்போனார்!—வயித்தியர் வந்து விட்டாரா?

சு. [ஜமீன்தாரை உற்று கவனித்து] நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். எசமான் ஸ்வாசம் நிதானமாய்த் தான் வருகிறது. எதற்கும் நான் வயித்தியருக்குச் சொல்லியனுப்பிவிட்டு, உள்ளே அம்மாமார்களுக்கும் தெரிவிக்கிறேன்.

[போகிறான்.]

ப. அப்பா, இந்தக்கிழவன் என்ன கெட்டிக்காரன் பார்த்தீர்களா! யாராவது வந்தால் நீங்கள் மேல்சுவாசம் விடுவது போல் பாசாங்கு செய்யவேண்டும்! இல்லாவிட்டால் இந்தக் கதை நகராது!

ரா. சரிதான் குழந்தை—பேசாதே நீ! யாரோ வருகிறார்கள்!—

சுந்தரிபாய் வருகிறாள்.

சு. என்ன அது பத்மினி?—என்ன நேர்ந்தது? என்ன செய்தாய் நீ? நீ வருவதற்கு முன் ராமு சுவஸ்த மாயிருந்தானே! என்ன சமாசாரம்?—ஐயோ! மேல் சுவாசம் வருகிறதே அவனுக்கு! பிரக்ஞை தப்பிவிட்டான் போலிருக்கிறதே! ஐயோ சாமி! நான் எது நேரிடுமெனப் பயந்தேனோ அது நடந்து விட்டது! நம்முடைய குடும்பம் அடியோடு அழிந்ததே! ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ள எல்லா ஏற்பாடுகளும் செய்தாய்விட்டதே வாஸ்தவத்தில்! இப்பொழுது நாம் என்ன செய்வது? இதென்ன ஆச்சரியம்! எல்லாம் ஏதோ ஆச்சரியமாயிருக்கிறது! நீ வந்தவுடன் அவன் பிரக்ஞையற்றுப்போக வேண்டிய காரணம் என்ன?

ப. ஆமாம் பாட்டி, நான் வந்ததனால் தான் அப்பா இந்த ஸ்திதியில் கிடக்கிறார் என்று எனக்குள் ஏதோ தோன்றுகிறது.

சு. அவ்வளவு ஒப்புக்கொள்ளுகிறாயா நீ? அப்படியா செய்தி! பார்ப்போம்!

கிரிஜாபாய் வருகிறாள்.

கி. ஐயோ சுவாமி! என்ன சமாசாரம்? லாயர் பீதாம்பரையர் எங்கே? இன்னும் வரவில்லையா அவர்? வயித்தியருக்காவது யாராவது சொல்லியனுப்பிக்கிறதுதானே!

ப. அம்மா, ஈசன் செயல் எல்லாம்,

டாக்டர் நாயுடும், லாயர் பீதாம்பரையரும் வருகிறார்கள்.

வ. என்ன! ஜமீன்தாருக்கு என்ன கெடுதி நேரிட்டது?—ஐயோ! பிரக்ஞை இல்லை போலிருக்கிறதே! [அவரை உற்றுப்பார்த்து] நினைத்தேன் நான்! இம்மாதிரி

தள்ளிவைப்பதெல்லாம் அபாயகர மென்று அப்பொழுதே அவருக்குச் சொன்னேன்—இப்படி நேரிடும் என்று சந்தேகித்தேன். நேற்றுகாலையிலேயே அவருக்குக் கொஞ்சம் புத்திமாருட்டம் இருந்தது. என்ன துரதிர்ஷ்டம்! அந்த ரண சிகிச்சை மிகவும் அபூர்வமானதாயிருந்திருக்கும்! என் பெயரை நிலைபெறச் செய்திருக்கும்! ஒருவேளை என்னைப் பெரும் பணக்காரனாகவும் ஆக்கி யிருக்கும்! எல்லாம் போச்சுது! என் துர்அதிர்ஷ்டம்!

பி. அந்த ரண சிகிச்சை—இப்பொழுது—நீங்கள் செய்யக் கூடாதோ?

டா. அது—இனிமேல்—செய்ய—முடியாது! நாங்கள் தீர்மானம் செய்திருந்தது ஒரு விசேஷமான ரண வயித்திய சிகிச்சை! உடல் முழுவதையும் ஒருவாறு சுத்தம் செய்வதாகும். நோயாளியின் உத்தரவின்றி அதை நாங்கள் செய்யக்கூடாது. இனிமேல் முடியாது!

பி. எப்படியாவது—ஒரு ஐந்து நிமிஷமாவது—அவருக்கு பிரக்ஞை வரும்படியாகச் செய்ய முடியாதா தங்களால்?

கி. டாக்டர், கொஞ்சம் பிரயத்னம் பண்ணிப்பாருங்களேன்; முடியவே முடியாதா உங்களால்?

டா. அப்படி என்றால் செய்யக் கூடுமானால் நான் எவ்வளவு சந்தோஷப்படுவேன்! ஐந்து நிமிஷத்திற்கு பிரக்ஞை வந்தால், அவர் முழுவதும் சுவஸ்தமடைந்தவர்தான்! அவரைச் சரியென்று ஒப்புக்கொள்ளச் செய்து அந்த ரண சிகிச்சையைச் செய்து முடிப்பேன்!

பி. இதோ—அவருடைய உயில் சித்தம் செய்து வைத்திருக்கிறேன். இந்த உலகத்தில்-இப்படிப்பட்ட உயிலை எவரும் எழுதியதில்லை யென்று சொல்லவேண்டும், அத்தனை ஆச்

சரியகரமானது! எத்தனை சட்டநுட்பங்கள் அடங்கியது! என்ன துரதிர்ஷ்டம்! டாக்டர், கொஞ்சம் முயன்று பாருங்கள்! ஒரு ஐந்து நிமிஷம்—அவ்வளவு தான்!

ப. கடைசி சமயத்தில் அப்பா இத்தனை பெயருடைய கோரிக்கைகளையும் பாழாக்கியது பெரும் தவறாகும்!

சு. பெருப்புத்தி யில்லாத்தனம்!

கி. பெரும் துர் அதிர்ஷ்டம்!

பீ போச்சுது—வாய்த்த ஒரே சமயம்!

டா. பாழாச்சுது—என் கோரிக்கை யெல்லாம்!

ரா. [எழுந்திருந்து அவர்கள் மத்தியில் விரைந்து சென்று] மாது சிரோமணிகளே! கனவான்களே! இத்தனை பெயருடைய கோரிக்கைகளெல்லாம் கைகூடாதபடிச் செய்ததற்காக எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது! இப்பொழுது எல்லாம் தீர்ந்தது! இன்னொருமுறை உங்களுடைய அதிர்ஷ்டம் பலிக்குமாக!

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

இரண்டு ஆத்மாக்கள்

நாடக பாத்திரங்கள்

ஸ்ரீ வாசுதேவ சர்மா	...	ஓர் கலைஞர்
ஆநந்தராவ்	...	அவருடைய தந்தை
சரஸ்வதிபாய் தனபாய்	...	அவருடைய இரு மனைவியர்
வேலு	...	அவருடைய வேலைக்காரன்
அம்மாயி	...	அவர் வீட்டு வேலைக்காரி

உத்தம அருவம், நீச அருவம் முதலியன

இரண்டு ஆத்மாக்கள்

இடம்:—ஸ்ரீ வாசுதேவ சர்மாவின் படுக்கை அறை.

அறையின் மத்தியில் மெத்தைப்போட்ட ஒருகட்டில் இருக்கிறது. அறையில் ஒருவருமில்லை. படுக்கையின் அருகிலுள்ள ஒரு சின்ன மேஜையின்மீது குடிப்பதற்கு ஜலமும் பாலும் வைக்கப் பட்டிருக்கிறது. படுக்கைக்குப் பின்பாக ஒரு படுதாவும் சில சாமான்களும் இருக்கின்றன. அறையிலுள்ள விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருக்கிறது. இந்த அறையிலிருந்து, இதற்கு வலதுபுறம் உள்ள அறையில், வெளிச்சம் நன்றாயிருப்பதும, அநேகம் பெயர் அங்கே உட்கார்ந்து உறக்க சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருப்பதும் தெரியக்கூடுமானதாயிருக்கிறது.

காலம்:—இரவு பத்துமணிக்கு மேல்.

சரஸ்வதிபாய் இடது பக்கத்துக் கதவின் வழியாக வருகிறாள். அவள் பிரவேசித்து படுக்கையில் ஒருவருமில்லாததைக் கண்டு, பெருமூச்செறிந்து, வலது புறமுள்ள பக்கத்தறையைப் பார்த்து, சில அடிகள் எடுத்து வைத்து, ஒரு நாற்காலியின் முதுகுபக்கத்தைப் பிடித்துக் கொண்டு ஆலோசனையில் மூழ்கினவளாய் நிற்கிறாள்.

ச. ஐயோ! இன்னும் உள்ளே வரவில்லையா? அவர் வாக்களித்தாரே!—உம்! இதை நான் எப்படித்தான் சரிப்படுத்துவது? ஒன்றும் செய்ய அசக்தையாயிருக்கின்றேனே!—நான் என்ன செய்யக்கூடும்? [கட்டிலருகிற் போய் அதன் மீது உட்காருகிறாள்.] உண்மையில் இது தலைவிதிபோலும்!—வேறென்ன?—இல்லை! அபாயகரமான ஸ்திதியில் அபாயகரமான ஔஷதங்களைக் கொடுக்கவேண்டியதுதான்!

வலது பக்கத்துக் கதவின் வழியாக வேலுவருகிருன். சரஸ்வதிபாயைக் கண்டு தியங்கி உடனே திரும்பிப் போகப்பார்க்கிருன்.

ச. என்னத்திற்காக உள்ளே வந்தாய்?—ஏன் தாமதிக்கிருய்?

வே. ஒன்றுமில்லை—ஒன்றுமேயில்லை அம்மா.

ச. இல்லை—அது பொய்! உன் கண்களைப் பார்க்கும் பொழுதே அது தெரிகிறது, சொல்!

வே. இல்ல அம்மா—விசேஷமானது ஒன்றுமில்லை.

ச. விசேஷமில்லாதிருந்தும் நான் அறியக்கூடாததான அப்படிப்பட்டது என்ன? [அவனை நேராக உற்றுப்பார்த்து] நீ சொல்லுகிருயா என்ன?

வே. அம்மாளுக்கு ஒரு வேளை மிகவும் கோபம் வரும் என்று நினைத்தேன்.

ச. ஏன்? எதற்காக? நீ என்ன செய்ய இருந்தாய்?

வே. ஒன்றுமேயில்லை அம்மா! எஜமான் ஏதோ ஒரு புட்டியைக் கொண்டுவரச் சொன்னூர்—[பக்கத்தறையிலிருந்து "வேலு! எத்தனே நாழி! எங்கே மருந்து புட்டி?" என்கிற குரல்] இதோ எஜமான்! வந்துவிட்டேன்!

ச. ஆனல், எடுத்துக்கொண்டுபோ அதை; எந்த புட்டி? எங்கே இருக்கிறது?

வே. அது இருக்குமிடம் எனக்குத்தெரியும்.—அம்மாளுக்குக் கஷ்டம் வேண்டாம்.

[ஒரு அலமாரிக்குப்போய் ஜாக்கிரதையாய் அதைத திறந்து, அதிலிருந்து ஒரு புட்டியை எடுத்து அதைத் தன்வஸ்திரத்தால் பாதிமூடி வெளியே போகப்பார்க்கிருன்.]

ச. வேலு! அது என்ன மருந்து? நான் பார்க்கவேண்டும் கொண்டுவா. [அவன் மயங்கு வதைக்கண்டு] அதை ஏன் ஒளித்துவைத்திருக்கிறாய்? கொண்டுவா இப்படி அதை! [வேலு இன்னும் தியங்குகிறான். சரஸ்வதிபாய் கட்டிலிலிருந்து விரைந்து எழுந்து, வேலுவின் கையிலிருந்து அந்தப் புட்டியைப் பிடுங்கி, அதன் மீது ஒட்டியிருக்கும் காகிதத்தைப் பார்க்கிறாள்.] என்ன!—விஸ்கி!—இவ்வளவுக்கு வந்து விட்டதா!

வே [பயத்தால் நடுங்கி] இல்ல அம்மா! இது எஜமானுக்கல்ல, அவருடைய சில சிநேகிதர்களுக்கு.

ச. சிநேகிதர்களுக்கு! விஸ்கியா! [கொஞ்சம் யோசித்து] போய் உன் எஜமானனிடம், நீ இந்த புட்டியை எடுக்கும் பொழுது நான் கண்டு பிடித்துவிட்டதாகவும், அதை உன்னிட மிருந்து பிடுங்கி கீழே மோதி உடைத்து விட்டதாகவும சொல்' போ! [என்று சொல்லி அந்தப் புட்டியை சாவதான மாய்த் தரையில் மோதி, எவ்வளவு சப்தம் செய்யமுடியுமோ அவ் வளவு சப்தம் செய்து உடையும்படிச் செய்கிறாள்; வேலு பயந்து வலதுபுறம் கதவின் மூலமாகப் பக்கத்தறைக்குப் போய் விடு கிறான்.]

ச. ஒரு அடியில் ஒரு உடையல்! நன்றாய் ஆரம்பிக்கப் பட்டது!

இடது புறம் கதவுவழியாக அநந்தராவ் விரைந்து வருகிறார்; சப்தத்தின் காரணத்தையறிய வேண்டுவதே போல் கவலையுடன் சுற்றிப் பார்க்கிறார்; பிறகு சற்று தூரத்தில் அசையா மல் நின்று கொண்டிருக்கும் சரஸ்வதிபாயை திடீரென்று நோக்குகிறார்.

ஆ. நீயா அது சரஸ்வதி? என்ன சப்தம் அது?

ச. என்ன சப்தம் மாமா?

ஆ. ஏதோ உடைந்த சப்தம் கேட்டேன். அது இந்த அறை யில் தான் என்று எண்ணினேன்.

ச. ஓ! ஆமாம்! என்னுடைய ஹிருதயமாயிருக்கலாம் ஒரு வேளை, மாமா! அல்லது அந்த புட்டியாயிருக்கலாம்.

ஆ. [கண்களைத் துடைத்துக்கொண்டு, நேராகநிமிர்ந்து] ஹிருதயம்! —புட்டி!—என்ன சமாசாரம் இதெல்லாம்? நீ என்ன சொல்லுகிறாய் குழந்தை?

ச. வேண்டியிராத பொருளைத் துண்டுதுண்டாக உடைத்து விடலாம் என்பது நியாயமல்லவா மாமா?

ஆ. துண்டுதுண்டாய் உடைப்பதா? வாஸ்தவமாய் எனக்கு அர்த்தமாகவில்லை. என்னைப்பற்றி யென்ன? எனக்கு வயதாகிவிட்டது—நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை யென்று நினைக்கிறேன்—வாஸ்தவத்தைச் சொல்லுமிடத்து —உம்—யாராவது நான் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களா?

ச. நான் உயிரோடிருக்குமளவும், மாமா, அப்படிச் சொல்லாதீர். நான் தாய் தந்தையில்லாத அநாதையாயிருந்தேனென்றும், என்னை நீர் எடுத்துவளர்த்தீர் என்பதையும், நான் எப்பொழுதாவது மறக்க முடியுமா?

ஆ. ஆ! ஆம்! உன்மீது நான் எவ்வளவு பிரியமாயிருந்தேன்.

ச. மாமா, நீங்கள் சரியாக அந்த இறந்த காலத்தை உபயோகித்தது எனக்கு சந்தோஷம்.

ஆ. உம்! அதல்ல சரசா! எனக்கோ வயதாகி விட்டது; அதனால்தான் வாசு உன்னை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினேன் என்பதை நீ கவனிக்கவேண்டும்.

ச. கட்டாயப்படுத்தினீர்!—மாமா, அப்படிக் கட்டாயப் படுத்தினது என்னத்திற்குக் கொண்டுவந்து விட்டது என்பதைநீர் கவனித்தீரா?

ஆ. இல்லை குழந்தை, இதையெல்லாம் உன் மனதில் அவ்வளவு வைத்துக்கொள்ளக் கூடாது, எத்தனை பெயர்

இரண்டு தாரங்களைக்கொண்டும் சுகமாய் வாழ்ந்திருக்கிருர்கள்? என்ன இருந்தபோதிலும், தனம் உன் சொந்த தாயாதி தானே ?

ச. மாமா, வயித்தியர் நான் குழந்தை பெறுவது அசாத்தியம் என்று சொன்ன பிறகு, இந்தக் கலியாணத்திற்குக் குறுக்காக நான் ஒன்றும் நிற்கவில்லையென்பது உங்களுக்கு நன்ருய்த்தெரியும். ஆயினும் இப்படி அசட்டை பண்ணப்படுவேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை; அது கூடபெரிதல்ல! அதோ—பாரும்—உம்முடைய பிள்ளை—எப்படி சூதாடுகிருர் என்று—பணத்துக்காக !

ஆ. சரசா, இந்த விஷயங்களிலெல்லாம் நீ கொஞ்சம் ஆத்திரப்படலாகாது; நன்ருய் யோசிக்குமிடத்து, சீட்டாடுவதில் கெடுதி அவ்வளவு அதிகமாயில்லை; நீ அதைச் சூது என்கிருய்! எனக்குத்தெரியும்; அவன் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கிருன் என்றும் கெட்டிக்காரன் என்றும்; அவன் பணம்கூட அதிகமாக சம்பாதிக்கிருன் என்றும் கேள்விப் படுகிறேனே!—

ச. சம்பாதிக்கிருர்! அதிக பணம்!—ஆம்! வேண்டியதெல்லாம் இப்பணம் ஒன்று தான் போலும்! என்மூலமாக அவருக்குக் கிடைத்த சொத்து போதாதுபோலும்! அவருடைய நடத்தையைப்பற்றி என்ன? அவருடைய படிப்பைப்பற்றி என்ன? மாமா, மாஸ்டர் ஆப் ஆர்ட்ஸ் பரீட்சையில் அவர் மூன்ரும் முறை தவறிப் போனுர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது அவருக்கு மூளையில்லாததனுல் அல்ல; அவர் ஒரு பெரிய உபாத்தியாயராக வேண்டுமென்று எப்படி கோரியிருந்தார் என்பது உங்களுக்கு நன்ருய்த்தெரியுமே! மாமா! எவ்வளவு உத்தமமான மனேநிச்சயங்களுடன் அவர் ததும்பிக்கொண்டிருந்தார் ஒரு காலத்தில்! எங்கே—எங்கேபோயின அவைகளெல்லாம்?

ஆ. உம்'—குழந்தாய் சரசா, [கொஞ்சம் இருமி] இப்பொழுது எனக்கு உடம்பு சுவஸ்தமாயில்லை, என்பழய இருமல் வருகிறது, நான் இன்னொரு வேளை உன்னைப் பார்க்கிறேன். [இருமி] ஏதோ துர்க்கந்தமாயிருக்கிறது இந்த அறையில்!

ச. ஆம் மாமா; அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அது—விஸ்கி சாராயம்! வேலு இங்கு உள்ளே வந்து அந்தப்புட்டியை எடுத்தான். நான் அதைப் பார்த்து, அவன் கையினின்றும் அதைப்பிடுங்கி, தரையின்மீது மோதி, துண்டுதுண்டாக உடைத்தேன்! மாமா, இவ்வுலகில் ஒரு நல்லகாரியம் அவ்வளவு சப்தம் செய்தது இது தான் முதல் முறை!

ஆ. அப்படியா சமாசாரம்?—என்னமடத்தனம்!—நான் முன்பே சொன்னேன் அவனுக்கு!—உம்! [இருமி] எனக்குப் புழுக்கமாயிருக்கிறது குழந்தாய்! நாம் பார்ப போம்—இன்னொருசமயம்!

ச. இன்னொரு சமயம்! அது முடியாது மாமா' இப்பொழுதே! இல்லாவிட்டால் எப்பொழுது மில்லை! இன்னொரு சமயம் என்று சொன்ன ஒருவரும் எக்காரியத்தையும் செய்து முடித்ததில்லை!

ஆ. [அதிகமாக இருமி] ஆ' எனக்கு மூர்ச்சைவரும் போலிருக்கிறது!

ச. மாமா, உங்களுடைய இருமல் கூட எனக்கு விரோதியாயிருக்கிறதே! நீர் மனம் வைத்தால் உமக்கு எல்லாம் சவுக்கியமாகி விடும்! நான் சொல்வதைக் கேளும்! [அவர்முன் முழந்தாளிட்டு] மாமா, நீர் தான் எனக்குத் தாயும் தந்தையுமாயிருந்தீர்! சாஸ்திரப் பிரகாரம் நான் உம்முடையமருமகளே! காப்பாற்றும் அவரை!—என் புருஷனை!—உம்முடைய குமாரனை!—இக்கெட்ட வழிகளினின்றும்!—உம்மால்முடியும்! உம்மால் தான் முடியும்!

ஆ. [தோட்களை அசைத்து] என்னால் இருப்பத்தான் முடியும் இப்பொழுது—குழந்தாய்!—ஆ! என்னைப் போகவிடு. [ஓயாது இரும்பி, கதவின் பக்கமாக சில அடிகள் எடுத்துவைத்து பிறகு திரும்பி] இன்னொருசமயம்! ஒருவேளை!—இன்னொருசமயம்!—எனக்கு உடம்பு சுவஸ்தமானவுடன்!

[திரும்பி இடது புறம் கதவின் மூலமாகப்போகிறார்.]

ச. நீர்—சுவஸ்தமானவுடன்!—அப்படியே கோருவோம்! [தன் புருஷனும் அவனுடைய சிநேகிதர்களும் சீட்டு விளையாடிக் கொண்டு சந்தோஷமாய்க் காலம் கழிக்கும், பக்கத்து அறையின் கதவின் பக்கமாக மறுபடியும் பார்க்கிறாள்; பிறகு உடைந்து போனபுட்டியின் துண்டுகளைப் பொறுக்கி சின்ன மேஜையின்மீது வைக்கிறாள்.]

வேலு இடதுபுறம் கதவின் வழியாக வருகிறான்; சரஸ்வதியைப் பார்த்து மௌனமாய்த்தயங்கி நிற்கிறான்.

ச. இப்பொழுது எதற்காக வந்தாய், வேலு?

வே. சின்ன அம்மாளுக்கு திடீரென்று உடம்பு அசௌக்கியமாகிவிட்டதாம், நிரம்ப ஜுரமாயிருக்கிறதாம், தலைநோய் அதிகமாய் எடுக்கிறதாம்; அவர்களுடைய வேலைக்காரி என்னிடம் சொன்னாள்; நான் இதை எஜமானிடம் சொன்னேன், இதை உங்களிடம் சொல்லி வயித்தியருக்குச் சொல்லியனுப்பச் சொன்னார்கள், அல்லது உங்களையாவது என்ன சமாசாரம் என்று பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள்.

ச. எங்கேயிருக்கிறார்கள் உங்கள் சின்ன அம்மா இப்பொழுது?

வே. கூடத்தில், சோபாவின் பேரில்; ஏதோ மேலேவிழுந்தாற் போலிருக்கிறதென நினைக்கிறேன்—அவர்கள் நோயினால் அழுவதைக்கேட்டேன்.

ச. சரி—நான் பார்க்கிறேன்; நீ போய் வண்டிக்காரன் சாப்பிட்டு விட்டுத்திரும்பி வந்து விட்டானா விசாரி. [வேலு போகிறான்] உம்—சரி! [இடது பக்கம் கதவின் வழியாகப் போகிறாள்; சில நிமிஷம் கழித்து, சரஸ்வதிபாயும், வேலைக்காரி அம்மாயும் தனபாயைக் கையைப் பிடித்து நடத்திக்கொண்டு வருகிறார்கள்; தனபாயை மெல்ல சோபாவிடம் அழைத்துக்கொண்டு போய் அதன் பேரில் படுக்க வைக்கிறார்கள்.]

ச. தனம், அப்படியே பேசாமல் படுத்துக் கொண்டிரு; உனக்கு ஜுரம்வரும் பொழுதெல்லாம் அதிகமாய்த் தான் வருகிறது. [வேலைக்காரியைப் பார்த்து] எத்தனை நாழிக்கு முன் இந்த ஜுரம் வந்தது? குளிர் நடுக்கம் கூடவந்ததா?

அ. எனக்குத் தெரியாதம்மா; இன்று சாயங்காலம் அம்மா நன்றாகத்தானிருந்தார்கள், நான் அவர்களுக்குத் தலை வாரி புஷ்பம் சூட்டினேன். அப்பொழுது மிகவும் நன்றாகத்தான் தென்பட்டார்கள். கொஞ்சம் நாழிக்கு முன்புதான் அம்மாளுடைய படுக்கை அறைக்குப் போனேன் அவர்களுக்குப் படுக்கை போட; படுக்கை விரிப்பு கிழிந்திருந்த படியால் வேறொன்று கொண்டு வரப்போனேன். அம்மாளை நான் எங்கும் காணவில்லை. படுக்கைபோட்டு, விளக்கை யேற்றி, தண்ணீர் எல்லாம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, படுதாவைத்தள்ளி விட்டு, கதவைச்சார்த்தி வெளியே வந்தேன். அப்பொழுது அம்மா கூடத்தில் தடுமாறி விழுவதைக்கண்டேன்! ஓடிப்போய் கூச்சல் போட்டேன், வேறென்ன செய்யக்கூடும் என்றால்? அவர்களைப் பிடித்துக் கொண்டு சோபாவின்மீது சாயச்செய்தேன். பிறகு வேலு நாயக்கரைக் கூப்பிட்டு எஜமானிடம் போய் சொல்லச்சொன்னேன்—ஐயோ! இந்த ஜுரமானது எவ்வளவு திடீரென்று வருகிறது மனுஷர்களுக்கு!

ச. இது உன் பழய மெலேரியா ஜுரமாய் இருக்கவேண்டு மென்று நினைக்கிறேன்; தனம், இதைப்பற்றி கவலைவேண் டாம்; நாளைக்கு சுவஸ்தியாகி விடுவாய்—வயித்தியர் கொடுத்த அந்த மாத்திரைகள் உன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறாயா ?

த. அந்த மேஜையின் அறையில் இருக்கிறதென நினைக்கி றேன்.

ச. இந்த மாதிரியான ஜுரம் ஒருதரம் பிடித்துக் கொண் டால் சாதாரணமாக விட்டு நீங்குவது அபூர்வம். நான் உனக்கு முன்பே சொன்னேனே நீ ஜாக்கிரதையா யிருக்க வேண்டுமென்று.

வேலு வருகிறான்.

கோச்மான் வந்து விட்டானா ?

வே. இல்லை அம்மா, ஏதோ உற்சவத்திற்குப் போகவேண்டு மென்று எஜமானிடம் விடுமுறை வாங்கிக்கொண்டா னாம் இன்றிரவிற்கு.

ச. சரி! இப்பொழுது என்ன செய்யக்கூடும்? முன்பே பத்து அடித்தாயிற்று. நாளை காலை வரையில் பொறுப்போம். இதோபார், தனம், உன் அறைக்குப்போவதற்கு உனக்கு பலஹீனமாயிருந்தால் இங்கேயே படுத்துறங்கு; உன் சாவியைக்கொடு, நான் போய் அந்த மாத்திரைகளைக் கொண்டுவருகிறேன். இரண்டு மூன்றுதரம் அந்த மருந்தை நீ சாப்பிட்டால் உனக்கு உடம்பு சுவஸ்த மாகி விடும் என்று நம்புகிறேன். இந்த மாதிரி உன் உடம்பைப் பார்த்துக்கொள்ளாதபடி அஜாக்கிரதையா யிராதே ! எங்கே உன் சாவிகள் ?

தி. ஒரே முட்டாய் என் அறைக்கு நான் போய் விடுகிறேன்; என்னைப் பிடித்துக்கொள் அம்மாயி !

[அம்மாயியைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக் கிருள்; பிறகு சரஸ்வதியின் ஒத்தாசையால் மெல்ல இடது கதவு வழியாகப்போ கிருள்.]

ச. மருந்தைச்சாப்பிட மறந்துபோகாதே! இரண்டுமாத் திரை கூட எடுத்துக்கொள்ளலாம் நீ இன்றிரவு.

[சரஸ்வதி அவர்களுடன் அறையை விட்டுப்போகிருள்.]

வே. உம்! அப்படிப்பட்ட புருஷனுக்கு எப்படிப்பட்ட பெண்சாதி!

[கீழே மிகுதியாய்க்கிடக்கும் பாட்டில் ஓடுத்துண்டுகளைத் தரையினின்றும் பொறுக்கி எடுத்து, சின்னமேஜை யின் மீதிருக்கும் துண்டுகளுடன் வெளியில் கொண்டு போகப்பார்க் கிருன்.]

சரஸ்வதிபாய் மறுபடியும் வருகிருள்.

ச. என்ன செய்கிருய் அங்கே வேலு? தொடாதே அவை களை ! அவைகளை நான் வைத்து வைக்கப் போகிறேன்! ஒரு சமயம் உங்கள் எஜமான் அவைகளைப் பார்த்து சந்தோஷப்பட்டாலும் படுவார், என்றைக்காவது ஒரு நாள்!

வே. உங்கள் இஷ்டம் அம்மா.

ச. போய் உன் எஜமானுடைய சிநேகிதர்களெல்லாம் இப் பொழுதாவது அவரை விட்டுப் போய்விட்டார்களா இல்லையா பார்.

வே. அப்படியே அம்மா. [போகிருன்.]

ச. இது தான் அநுகூலமான சமயம்போல் காணுகிறது. தனம் அசௌக்கியமா யிருக்கும்பொழுது, சரஸ்வதி தன் காரியத்தை முடிக்கலாம்! [பக்கத்தறையிலிருக்கும் விளக்குகளெல்லாம் அவிக்கப்படுவதைக் கவனிக்கிருள்.] ஆ! இப்பொழுதாவது!—அவர் வருகிருர்-என நினைக்கிறேன்.

[என்று சொல்லி அறையின் மத்தியில் நிமிர்ந்து நிற்கிருள்.]

வலது புறமிருந்து ஸ்ரீ வாசுதேவ சர்மா விரைந்து வருகிருர்.

ஸ்ரீ. என்ன! — இன்னமா விழித்துக் கொண்டிருக்கிருய்?

ச. அது உமக்கு வருத்தமா யிருக்கிறதோ?

ஸ்ரீ. உம்—தனம் எப்படி இருக்கிருள்? என்ன அவளுக்கு உடம்பு?

ச. அவள் இறந்து போய்விடப் போகிருள் என்று பயந்தீரா என்ன? அதனுல்தான் இன்னும் சீட்டாடிக்கொண்டிருந் தீர்களோ? அதனுல்தான் அவளை என்னிடம் அனுப்பி னீர்களோ?

ஸ்ரீ. ஓ' ஆமாம்! நீ பேசுவதில் நிரம்ப கெட்டிக்காரி! எனக்குத் தெரியும். இதற்கெல்லாம் இப்பொழுது எனக்குக் கால மில்லை. எனக்கு மிகவும தூக்கமா யிருக்கிறது உம்— தனத்திற்கு எப்படி யிருக்கிறது?

[படுக்கைக்குப்போய் தூங்கப் பார்க்கிருர்.]

ச. அவ்வளவு மிகவும் தூக்கமா யிருக்கிறவர் தனத்திற்காக வாவது சரஸ்வதிக்காகவாவது கவலைப்படமாட்டார் என்று நினைக்கவேண்டும் நான்.

ஸ்ரீ. ஆம், நீ சொல்வது சரிதான்—ஓ! நான் தூங்கி விடுவேன் என எண்ணுகிறேன்-அவளுக்கு சுவஸ்தமாகத்தா னிருக் கும் என்று நினைக்கிறேன்—ஆயினும்—வேனு சொன் ஞன் என்னிடம்—அந்த புட்டியை ஏன் உடைத்தாய்?

[சரஸவதி திரும்பி அவனை உற்றுப் பார்க்கிறாள்]—நான் சொல்லவந்த தென்னவென்றால்—அது எப்படி சம்பவித்தது?

ச. சம்பவித்ததா?—இல்லை—நான், தீர்மானித்து, வேண்டுமென்று செய்தேன்'—நான் தான் உடைத்தேன் அதை! அன்றியும்—அது உமக்குத் தெரியும்!

ஸ்ரீ. என்னை என்னுடைய சொந்த வீட்டில் என் சொந்த வேலைக்காரர்களுக் கெதிரில் இம்மாதிரி அவமானப் படுத்துகிறாயா!

ச. உங்கள் வீடா? இன்னும் இது உங்களுடையதாகவில்லை; நான் இறபபதன் முன் உம்முடையதாகாது. இதற்குள் மறநது போய் விட்டீர்களா?

ஸ்ரீ. நீ நிரம்ப கெட்டவள்! எனக்கு மிகவும் தூக்கமா யிருக்கிறது..............போ!

ச. நான் எங்கே போவது? ஏன் போகவேண்டும்?

ஸ்ரீ. நான் உனக்கு பதில் சொல்லமாட்டேன்; உன் இஷ்டப் படிச செய்.

ச. நீர் என் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

ஸ்ரீ. அது அசாததியம்! என்னைத் தனியே இருக்க விட மாட்டாயா?

ச. இதற்குள் முடியாது! நான் சாகுமளவும் முடியாது! என்னை மணம் புரிந்தபொழுது என்மீது காதல் கொண்டிருந்ததாகக் கூறினீர் அல்லவா?

ஸ்ரீ. இல்லை, நான் சொல்லவில்லை! ஒரு வேளை நான் சொல்லியிருக்கலாம்.—அப்பொழுது நான் மடையனாயிருந்திருக்கலாம—இந்த மாதிரி என்னையேன் தொந்திரவு செய்கிறாய்?

ச. நீர் இந்தமாதிரி ஏன் நடக்கிறீர்?

ஸ்ரீ. எந்த மாதிரி?

ச. உம்மைப் போலல்லாது.

ஸ்ரீ. என்னைப் போலல்லாதா?—நல்ல வேடிக்கை!

ச. உம்முடைய உண்மையான தன்மையைப்போல் அல்லாது —நான் சொல்வதைக் கேளும்!

ஸ்ரீ. இல்லை! மாட்டேன் நான்! நான் தூங்க வேண்டும்.

ச. இல்லை—உம்மைத் தூங்கவிடமாட்டேன். சில வருஷங்களுக்குமுன் எப்படி இருந்தீர், இப்பொழுது எப்படியிருக்கிறீர், என்பதை யோசித்துப்பாரும். அக்காலம் என்ன பெருந்தன்மைவாய்ந்த மனோநிச்சயங்களுடையவராக இருந்தீர்! கற்றறிந்தவராக வேண்டுமென்று எவ்வளவு ஆவல்கொண்டு எவ்வளவு பிரயத்னப் பட்டீர்! பெரிய ஆசிரியனாக வேண்டுமென்று எவ்வளவு முயன்றீர்!—உலகத்துக்கோர் உதாரணமாக வேண்டுமென்று!—இப்பொழுதுநீர் என்னவாகிவிட்டீர்? ஒரு சூதாடி! சீட்டாடுவதில் மோசஞ் செய்பவன்! குடிக்காரன்! சோம்பேறி! மானம் எல்லாம் அழிந்து, கோரிக்கை யெல்லாம் பாழாகி, உன்னதமான தீர்மானங்களெல்லாம் அடியுடன் ஒழிந்தவரானீர்! அந்தப் பெண் தனத்தை, உம்மிடம் எனக்குள்ள கௌரவத்தினாலும், அவள் மீது நான் கொண்ட பரிதாபத்தினாலும், உம்மை மணக்கவிட்டேன். அப்படிச் செய்தும், நீர் என்னைக் கண்ணெடுத்துப் பாராது, —ஒதுக்கி—வெறுத்தீர்!—நான் இனி எதற்காக உயிர் வாழவேண்டும்?

ஸ்ரீ. உன்னுடைய உபந்யாசத்தை நாளைவரை நிறுத்திவைக்கக்கூடாதா?

ச. இல்லை! இன்றிரவே என் கதி என்னவாவதென்று முடிவாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்! உம்முடைய

உணர்ச்சி யெல்லாம் அடியுடன் அழிந்துவிட்டதா? உம்முடைய பழைய அறிவு, ஞாபகம், உத்தம குணம், எல்லாம் தொலைந்து போய்விட்டதா? ஏன் இவ்வாறு அழிந்தீர்? உத்தம குணத்தை யெல்லாம் ஏன் போக்கடித்துக்கொண்டீர்? இதினின்றும் விழிக்க வேண்டிய காலம் இன்னும் வரவில்லையா?

ஸ்ரீ. எப்படி வரும்? கண் கொட்டக்கூட எனக்கு இன்னும் அவகாசம் வரவில்லையே.

ச. ஹா! இம்மாதிரியாக நீர் பிதற்றுவதைக் கேட்க என் ஹிருதயம் வெடிக்கின்றது! இன்னும் ஏதோ நீர் மன்ருடிக் கொண்டுதானிருக்கின்றீர் என்று எண்ணினேன்! முற்றிலும் மூழ்கிப்போய் மடிந்துவிட்டீர் என்று இப்பொழுது தான் தெரிகிறது!—கடவுள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும்! [என்று சொல்லி சரஸ்வதி சோபாவின் மீது உட்கார்ந்து சாய்ந்து தியானம் செய்வதுபோல் கண்ணை மூடிக்கொள்ளுகிருள்.]

ஸ்ரீ. எனக்காட்சேபனை இல்லை! அவர் உன்னைக் காப்பாற்றட்டும்!

[ஸ்ரீவாசுதேவ சர்மா உடம்பை நீட்டிக்கொண்டு தூங்க ஆரம்பிக்கிருர்; ஆசோதையின்றி புரளுகிருர்; சரஸ்வதி எழுந்திருந்து சற்று தூரத்தில் நின்று மௌனமாய் அவரைச் சற்று கவனித்துப் பார்த்துவிட்டு, விளக்கை இறக்கிவிட்டு, சோபாவுக்குப்போய் சாய்ந்து கொண்டு தூங்குவதேபோல் மறுபடியும் கண்ணை மூடிக்கொள்ளுகிருள். ஸ்ரீவாசுதேவ சர்மா ஏதோ உடம்பில் கொஞ்சம் நோயிருப்பதுபோல் இப்புறம் அப்புறம் புரண்டு நிம்மதி இல்லாதவர்போல் காணப்படுகிருர். பிறகு கட்டிலின் கீழிருந்து, ஒவ்வொரு பக்கம் ஒன்ருய், ஸ்ரீவாசுதேவ சர்மாவைப் போல் உடை அணிந்ததாய் இரண்டு

அருவங்கள் மெல்ல வெளிவருகின்றன. இந்த உத்தம ஆத்மா, நீச ஆத்மா ஆகிய இரண்டு அருவங்களும், சந்தடி செய்யாமல் நிமிர்ந்து நின்று ஒன்றை ஒன்று உற்றுப் பார்க்கின்றன. கட்டிலின் தலைப்பக்க மிருந்து வெளிவந்த அருவம் நீலகாந்தி யுடன் விளங்குகிறது. கால்பக்கமிருந்து வெளிவந்த அருவம் சிவப்பு காந்தியுடன் விளங்குகிறது.]

உ. ஆ. [ஆழ்ந்ததும் கம்பீரமானதுமான குரலுடன்] கொஞ்ச கால மாகப்பரிசுத்தமில்லாத உன் அக்கிரமங்களினால் என்னை வெறுப்படையச்செய்து தொந்திரவு கொடுக்கும் நீயார்? உன்னை இனி நான் பொறுக்க முடியாது; இனிமேல் உன்னை நான் சஹிக்கமாட்டேன். போய்விடு! இல்லா விடில் உன்னை வெட்டி வீழ்த்துவேன் தரைமீது!

நீ. ஆ. படுக்கையின்மீது புரண்டு கொண்டிருக்கும் இப்பாதகன், உன்னை கவனிக்கப்போகிறதில்லை. என்னைக் கேட்பதற்கு நீயார்? அவன் தன்னை என்னிடம் ஒப்பித்து விட்டான். அவன் என்னுடையவன், உன்னுடையவன் அல்ல! இனி ஒருபோதும் முடியாது! தோற்ற விஷயத்திற்காக சச்ச ரவிடுவானேன்! நீபோய்விடு! உனக்காக நான் பரிதாபப் படுகிறேன். அப்படி நீ செய்யாவிட்டால், உன்னை வெட்டி வீழ்த்துவேன் புவிமீது!

உ. ஆ. ஆயின் அவன்தானே அமர்களம்? மரணபர்யந்தம் யுத் தம் தானே?

நீ. ஆ. அப்படியே இருக்கட்டும்! வாராய்!

[இட்சணம் ஸ்ரீவாசுதேவசர்மா திடீரென்று விழித்து எழுந்து உட்கார்ந்து, பயத்தினால் வாய் குளறி கூச்ச லிடுகிறார்; இரண்டு அருவங்களும் மறைகின்றன; சரஸ்வதி விழித்து, விளக்கை ஏறப்பார்த்து, படுக்கையின் அருகில் விரைகிறாள்.]

ச. என்ன சமாச்சாரம்? ஏன் அப்படிச் கூச்சல் போட்டீர்?

ஸ்ரீ. [கண்களை நிமிட்டிக்கொண்டு] நீ ஏதாவது குரல் கேட்டாயா, அல்லது அது-ஏதாவது கனவோ? இரண்டு பெயர் சச்சரவிட்டுக் கொண்டிருந்ததாயும், என்னைப் பார்த்ததும், தங்கள் கத்திகளை உயர்த்திக்கொண்டு என்னை வெட்டுவதற்காக ஓடி வந்தது போலும் கனவு கண்டேன்!—நான் கூச்சல் போட்டேனு?

ச. ஆம், அப்படித்தான் செய்தீர். நான் கொஞ்சம் தூக்கமாயிருந்தேன், ஏதோ கலவரமான சப்தம் கேட்டது. என்ன' உங்கள் உடம்பு இப்படி நடுங்குகிறதே!

ஸ்ரீ. இங்கேயா தூங்கிக்கொண்டிருந்தாய் நீ? உன் அறைக்குப் போகவில்லையா நீ?

ச. இல்லை, சோபாவின்மீது சாய்ந்து கொண்டிருந்தேன், அப்படியே தூங்கிவிட்டேன் போலும்.

ஸ்ரீ. ஹா! என்ன பயங்கரமான கனவு! எனக்கு எவ்வளவு திகில் உண்டாக்கியது! கனவுகளுக்கு ஏதாவது அர்த்தமுண்டா? உனக்கு எல்லாம் தெரியுமே, சொல் எனக்கு?

ச. ஆம், அவைகளுக்கு அர்த்தமு முண்டு, அர்த்தமுமில்லை. இப்பொழுது நீர் மிகவும் கலங்கியிருக்கிறீர். காலையில் உமக்கு சொல்லுகிறேன். அது ஒன்றுமில்லை. இன்னும் பொழுது விடியவில்லை.

ஸ்ரீ. இனிமேல் எனக்குத் தூக்கம் வருமோ என்னவோ சந்தேகமாயிருக்கிறது.

ச. ஏன் வராது!—நீர்தான் பெருந்தூக்கம் தூங்குகிறவராச்சுதே!

[ஸ்ரீ வாசுதேவசர்மா மறுபடியும் படுத்துக்கொள்ளுகிறார்.]

ஸ்ரீ. உன் அறைக்குப் போக உனக்கிஷ்டமில்லா விட்டால்—நேரமாகவில்லையா ?

ச. எனக்குத்தூக்கமாயில்லை. இந்த சோபா எனக்குப் போதுமானதாயிருக்கிறது.

[விளக்கை இறக்கிவிட்டு, சோபாவிற்குப் போகிறாள்; கொஞ்சம பொறுத்து ஸ்ரீவாசுதேவ சர்மா, மறுபடியும் நிம் மதியின்றி புரளுகிறார்; முன்போல் அந்த இரண்டு அருவங்களும் வெளி வந்து நின்று ஒன்றை யொன்று உற்றுப்பார்க்கின்றன.]

உ. ஆ. பாதகனான பயங்காளியே ! ஏன் ஓடிப்போய்விட்டாய் ?

நீ. ஆ. ஓடினது நான் அன்று ! உண்மை உனக்குத்தெரியும்; நீ தான் பயங்காளி !

உ. ஆ. என் கத்தியை உயர்த்தினேன்! உடனே—நீ காணாமற் போனாய் !

நீ. ஆ. அப்படியன்று ! நான் தான் என் கத்தியை முதலில் உயர்த்தினேன், ஓடிப்போனது நீ தான் !

உ. ஆ. அது பொய் !

நீ. ஆ. நீ பொய் பேசுகிறாய்' நான் அல்ல !

உ. ஆ. என்னைப் பொய்யன் என்று சொல்லும்படியாக அவ்வளவு தைரியமிருக்கிறதா உனக்கு ? நில் அங்கே!

[என்று சொல்லி தன் கத்தியை ஓங்க, அட்சணம், ஸ்ரீ வாசுதேவசர்மா, பயஙகரமாய்க் கூச்சலிட்டு மறுபடியும் விழிக்கிறார்; இரண்டு அருவஙகளுமை மறைகின்றன, சரஸ்வதி சீக்கிரத்தில் மறுபடியும் தூக்கத் தினின்றும் கலக்கப்பட்டவளாய், பயந்து ஸ்ரீவாசுதேவசர்மாவின் படுக்கையருகில் ஓடுகிறாள். அவர் படுக்கையின் பேரில் மதிகலங்கினவராய் உட்கார்ந்திருக்கிறார்; சரஸ்வதிபாய் விளக்கை உயர்த்தி, நான்கு புறமும் சுற்றிப்பார்த்து, திரும்பிவருகிறாள்.]

ச. இன்னொரு கனவுகண்டீரா என்ன ?

ஸ்ரீ. கனவா ! அதுயார் அது சரஸ்வதியா?—ஹா! என்னைப் பிடித்துக்கொள்!

[அவள் அப்படியே செய்கிறாள்.]

ச. என்னசமாசாரம்?

ஸ்ரீ. இதோபார்! எப்படி நடுக்குகிறது எனக்கு !

ச. இன்னொருகனவு கண்டீரா என்ன?

ஸ்ரீ. [கண்களைத்திறந்து சுற்றிப்பார்க்கிறார்] எனக்குத் தெரியாது —அது அவ்வளவு பயங்கரமாயிருந்தது!—வாஸ்தவம் போலிருந்தது !

ச. எது அப்படி இருந்தது ?

ஸ்ரீ. அந்த இரண்டு பாதகர்கள்! அவர்கள் மறுபடியும் என்னைத்துரத்த ஆரம்பித்தார்கள், நான் ஓடி கடைசியில் உன் கரங்களில் வீழ்ந்தேன்; அப்பொழுது அவர்களில் ஒருவன் ஓடிப்போய் விட்டான், மற்றொருவன் நகைக்க ஆரம்பித்தான்.

ச. என்ன கனவுகள் !

ஸ்ரீ. இந்தக் கனவுகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா ? அவைகள் எதையாவது குறிக்கின்றனவா ?

ச. நான் பிறகு சொல்லுகிறேன்.

ஸ்ரீ. உதவாது, இப்பொழுதே நீ சொல்ல வேண்டும் எனக்கு —மறுபடியும் நித்திரைவராது—என்னமணி இப்பொழுது?

ச. [கெடியாரத்தைப் பார்த்து] இப்பொழுது தான் ஐந்துமணி ஆச்சுது; இதற்குள் அதிகாலை ஆய்விட்டதென்று நான் நினைக்கவில்லை.

ஸ்ரீ. சரி—நான் மறுபடியும் தூங்கப்போகமாட்டேன். அந்த கனவின் அர்த்தமென்னசொல்.

ச. [ஒரு நிமிஷம் யோசித்து] நீர் காப்பாற்றப்பட்டீர் என்பதை அது குறிக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை.

ஸ்ரீ. எப்படி? எதினின்றும்?

ச. நான் உமக்குச் சொல்லுகிறேன், இனிமேல் என் இஷ்டப்படி நீர் நடப்பதானால்.

ஸ்ரீ. கண்ணே, சரசா, அந்த கனவிற்குப்பிறகு, நீ கேட்பதற்கு நான் இல்லை என்று சொல்ல எனக்கு தைரியமில்லை. அந்தக் கனவு என்ன குறிக்கிறது?

ச. உமக்கு ஒரு பெரியகண்டம் நேர்ந்ததாகவும், அதினின்றும் தப்பி நீர் க்ஷேமமாய்ப்புகழோடு மீண்டதாகவும்.

ஸ்ரீ. எப்படி! விவரமாய்ச் சொல் சரசா, நான் பெரும்மூடனாயிருந்தேன் என்பதை நீ தான் பார்க்கிறாயே!

ச. சச்சரவுகளும் சண்டைகளும், உலகங்களின் வெளியிலுள்ள, மனிதர்களுக்குள்ளும், ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் மாத்திரம் அல்ல; அவைகள் ஒவ்வொருமனிதனுடைய மனதினுள்ளும் நேர்கின்றன. ஒவ்வொரு மனிதனும் அவனவன் அளவின்படி ஒரு யுத்தரங்கமே; அவனுயுளில் அவனுள் பெரிய குருக்ஷேத்திர யுத்தம் அங்கு நடக்கிறது; நல் எண்ணமும் தீய எண்ணமும் போர்புரிகின்றன. அவற்றுள் எது ஜெயிக்கிறது என்பது அநேக சம்பவங்களையும், காரணங்களையும் பொறுத்ததாகும்.

ஸ்ரீ. என்ன? நான் ஒரு யுத்த பூமியா யிருந்தேன்?

ச. ஆம், நீர் அறியாமலே உமது மனதில் இந்த யுத்தம் மும்மரமாய் நடந்திருக்கவேண்டும்; இனி கவலை வேண்டாம். எல்லாம் தீர்ந்தது.

ஸ்ரீ. தீர்ந்ததா? அது எப்படி முடிந்ததென்று எண்ணுகிறாய்?

ச. உமக்கேதாவது சந்தேகமுண்டோ? நீர் காப்பாற்றப்பட்டீர்! இனி நன்நடக்கை யுள்ளவராக இருப்பதாக வாக்களியும்!

ஸ்ரீ. ஆம், நான் சத்தியம் செய்கிறேன்—மனப்பூர்வமாய்—உண்மையாய்!

ச. வாரும்—புதிய நாள் பிறக்கிறது—உம்முடைய புதிய வாழ்வை, ஸ்நானம் செய்து விட்டு ஆரம்பியும், நன்னாளாம் முன்னாளில் நீர் விரும்பியபடி உமக்குக் கொஞ்சம் நல்ல காப்பி நான் சித்தம் செய்கிறேன்.

ஸ்ரீ. ஆ! இன்னும் எனக்கு அதிக தூக்கமா யிருக்கிறாற்போ லிருக்கிறது! நீ போ—நான் கொஞ்சம் நேரம் தூங்கி விட்டு, கொஞ்சம நிமிஷத்திற்கெல்லாம் எழுந்து வருகிறேன்.

ச. உதவாது! எழுந்திருந்து வாரும்! நீர் வாக்களித்திருக்கிறீர்!

ஸ்ரீ. இதோ!—வந்து விட்டேன்! என் தெய்வமே! எனக்கு வழி காட்டு!

[சரஸ்வதிபாய் கையில் விளக்கை எடுத்துக்கொண்டு போக ஸ்ரீவாசுதேவ சர்மா அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு பின் தொடர்கிறார்.]

திரை இறங்குகிறது.

நாடகம் முற்றியது